Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 148 | சனிக்கிழமை | சித்திரை 11 ஆம் நாள் 24 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20
விலை : ரூ.30

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

### சுகாதார நடைமுறையோடு வற்றாப்பளை பொங்கல்

முல்லைத்தீவு, ஏப்.24
கடுமையான சுகாதார கட்டுப்பாடுகளைப் பின்பற்றி வற்றாப்பளை கண் 19

# இந்தியாவின் நிலைமை இலங்கைக்கும் வரலாம்

## மக்கள் பொறுப்புடன் நடக்க வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

**கொழும்பு, ஏப்ரல்.24**
**மக்கள் பொறுப்புடன் நடக்காவிட்டால் தற்போது இந்தியாவில் ஏற்பட்ட நிலைமை இங்கும் உருவாகும் என்று எச்சரித்துள்ளார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன.** 19

### நேற்று 931 பேருக்கு தொற்று

கொழும்பு, ஏப்.24
இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 99 ஆயிரத்தைக் கடந்துள்ளது.
நேற்று இரவு 9 மணி வரை 931 புதிய தொற் 19



இந்தியாவில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நிலைமை எல்லை மீறிச் சென்றுள்ளது. நாளாந்தம் லட்சக்கணக்கானோர் தொற்றுடன் இனங்காணப்படும் நிலையில், உயிரிழப்புக்களும் வெகுவாக அதிகரித்துள்ளன. உயிரிழப்போரின் உடல்கள் புதுடில்லியில் உள்ள மயானம் ஒன்றில் எரியூட்டப்படும் காட்சியே இது. (படம் ரொய்ட்டர்ஸ்)

## நாட்டை முடக்கும் தீர்மானம் இல்லை



கொழும்பு, ஏப்.24
நாட்டில் கொரோனாத் தொற்று நிலைமை அபாய கட்டத்தை எட்டியுள்ளது என்று துறைசார் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், நாட்டை முடக்கும் தீர்மானம் எதுவும் இல்லை என்று கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவரும், இராணுவத் தளபதியுமான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். 19

## மிக வேகமாகத் தாவும் திரிபடைந்த வைரஸ்!

மருத்துவர் நீலிகா தகவல்

கொழும்பு, ஏப்.24
தற்போது நாட்டில் பரவிவரும் திரிபுபட்ட கொவிட் வைரஸ் ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு மிக வேகமாகப் பரவும் தன்மை கொண்டது என்று மருத்துவர் நீலிகா மலவிகே தெரிவித்துள்ளார்.
அரச தகவல் திணைக்களத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே 19

## பல்கலையில் மீண்டும் முள்ளிவாய்க்கால் தூபி



யாழ்ப்பாணம், ஏப்.24
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மீள அமைக்கப்பட்ட நினைவுத் தூபி நேற்றுத் திறக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் 19

## புதிய நடைமுறைகளுடன் வெளிவந்தது வர்த்தமானி

- இருவர் மட்டுமே நடமாடலாம்
- தனியார் வகுப்புகளுக்குத் தடை
- நிகழ்வுகளுக்குத் தடை
- போக்குவரத்தில் கட்டுப்பாடு

கொழும்பு, ஏப்.24
நாட்டில் கொரோனாத் தொற்று நிலைமை தீவிரமடைந்ததை அடுத்து புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் அடங்கிய வர்த்தமானி நேற்று வெளியிடப்பட்டுள்ளது. 16

## யாழ்ப்பாணத்தில் 12 பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், ஏப்.24
யாழ்ப்பாணத்தில் நேற்று 12 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் மூவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற் 19

### முச்சந்தி முரளி



"இவைபற்ற கதையக் கேட்டு சனம் நடந்தா ஏன் இந்த நிலைமை? என்ன நாசம் நடக்கப் போகுதோ தெரியேல...."

## ரி.ஐ.டி.யால் ஒருவர் கைது

வவுனியா, ஏப்.24
விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களின் பெயர்களில் போலி அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டுக்களைத் தயாரித்தார் என்ற குற்றச்சாட்டில் வவுனியாவில் ஒரு 19

## ஹரினின் விவகாரத்தால் நாடாளுமன்றில் களேபரம்

கொழும்பு, ஏப். 24
ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்காக ஹரின் பெர்னாண்டோவுக்கு எதிராக அரங்கே 16

## பாடசாலைகளை மூடும் திட்டம் எதுவும் இல்லை!

கொழும்பு, ஏப்.24
நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவல் மீண்டும் அதிகரித்துள்ள 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்தை திசைமாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள்

## குற்றஞ்சாட்டுகின்றனர் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

**வவுனியா, ஏப். 24**

**உயிர்ப்புடன் உள்ள தமிழர்களின் போராட்டங்களை நீர்த்துப்போகச் செய்வதற்காகவே அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படுகின்றன என்று வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.**

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றுக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் குடும்பங்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் இன்று நடைபெறவுள்ளது என்று கூறப்பட்டிருக்கும் நிலையிலேயே, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் தெரிவிக்கையில்;

மன்னாரில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை நாளை (இன்று) கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைத்துள்ளது. மனு ஒன்று தங்களால் வழங்கப்படவுள்ளது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். அரசுக்கு வழங்கப்போகின்றோம் என்று சிலரிடமும், தூதரகங்களுக்கு வழங்கப்போகின்றோம் என்று வேறு சிலரிடமும் மாறிமாறி கருத்துக்கள் தெரிவித்துள்ளனர். அதில் உண்மைத்தன்மை இல்லை. இது பாதிக்கப்பட்ட மக்களை திசை திருப்பும் விடயமாகத்தான் இருக்கிறது. எனவே பாதிக்கப்பட்ட மக்கள் அந்த கலந்துரையாடலில் பங்குகொள்வதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் பாதிக்கப்பட்டோரைக் காட்டி பணம் உழைக்கும் இயந்திரங்களாக மாறிவிட்டன. இவை நிதிகளைப் பெற வேண்டுமாக இருந்தால் இலங்கை அரசின் அனுமதியுடனேயே பெற முடியும். இவற்றால் இலங்கைக்கு எதிராக ஒருபோதும் செயற்படமுடியாது.

12 வருடங்களாக பல்வேறு நிறுவனங்கள் வந்தன. நிமல்கா, பார்த்தசாரதி, சிங்கம், பிரிட்டோ பெர்னாண்டோ என்று பல தரப்புக்கள் வந்தன. இவை அனைத்தும் காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய தீர்வை நீர்த்துப்போகச் செய்து பணம் சம்பாதித்தனர்.

தமிழர்களுக்கு எதிராக இவர்களின் சூழ்ச்சி 2009 ஆம் ஆண்டிலிருந்து தொடர்கின்றது. இது உயிர்ப்புடன் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டங்களை அழிக்கும் சதியே. நாம் எம்போதும் நிதிக்காகப் போராடவில்லை. நீதிக்காகவே போராடுகின்றோம். இவர்களால் வழங்கப்படும் மனுவில் என்ன உள்ளது? யாருக்கு அந்த மனு கையளிக்கப்படவுள்ளது? என்று எவருக்கும் தெரியாது. அதற்கான நிதி சீனாவினுடையதாகக் கூட இருக்கலாம். எனவே மக்கள் விழிப்புடன் இருங்கள். விழிப்பே ஓர் இனத்தைப் பாதுகாக்கும். என்றனர். (கு-110)

# 20 மனுக்கள் மீதான விசாரணை நிறைவு

கொழும்பு, ஏப். 24

கொழும்பு - துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டவரைபுக்கு எதிராக உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 20 மனுக்கள் மீதான விசாரணை நிறைவடைந்துள்ளது. இந்த மனுக்கள் தொடர்பான உயர்நீதிமன்றின் வியாக்கியானம் சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது என்று நீதியரசர்கள் குழாம் அறிவித்துள்ளது.

இந்த மனுக்கள் மீதான விசாரணை உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஐவர் அடங்கிய குழாம் முன்பாக ஐந்து நாள்களாக விசாரணை முன்னெடுக்கப்பட்ட நிலையில் நேற்றுடன் விசாரணைகள் முடிவடைந்துள்ளன.

மனுக்கள் மீதான மேலதிக எழுத்துமூல சமர்ப்பணங்களை எதிர்வரும் 29 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் உயர் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதியரசர்கள் குழாம் அனைத்து தரப்பினருக்கும் அறிவித்துள்ளது.

"அரசு நாடாளுமன்றில் சமர்ப்பித்திருந்த குறித்த சட்டவரைபை நாடாளுமன்றின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனோ அல்லது மக்கள் அபிப்பிராயத்தினூடாகவோ நிறைவேற்றும் அவசியம் இல்லை என்றும் நாடாளுமன்றில் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றுவது போதுமானது" எனவும் உத்தரவிடுமாறு சட்டமா அதிபர் சார்பில் மன்றில் முற்பட்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பர்ஸானா ஜமீர் கோரிக்கை விடுத்தார்.

இந்த சட்டவரைபில் அரசமைப்புக்கு முரணாக எவ்வித சரத்துக்களும் உள்ளடக்கப்படவில்லை எனவும், தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் எதிர்பார்ப்புடன் அரசு இந்த சட்டவரைபை சமர்ப்பித்துள்ளது என்றும் தெரிவித்து மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் வஜிர அபேவர்தன, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார, மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், மாற்றுக் கொள்கைக்கான கேந்திர நிலையம், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தகவல் தொழிநுட்ப தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவர் ஜீ.கபில ரேணுக பெரேரா உள்ளிட்ட தரப்பினரால் கொழும்பு - துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டவரைபுக்கு எதிராக 20 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் மீதான விசாரணையை பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான, புவனெக அலுவிஹார, பிரியந்த ஜயவர்தன, மூர்து பெர்னாண்டோ மற்றும் ஜனக டி சில்வா ஆகிய ஐவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னெடுத்துள்ளது. (கு-இ)

# கால்பந்து சம்மேளனக் கூட்டம் 6ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 24

அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்) முன்னிலையில் இலங்கை கால்பந்து சம்மேளனம் நேற்றுமுன்தினம் அழைக்கப்பட்டிருந்தபோதும், சம்மேளனத்தின் தலைவர் சமுகமளிக்காமையால் கூட்டம் இடைநிறுத்தப்பட்டது. எதிர்வரும் 6ஆம் திகதி இலங்கை கால்பந்து சம்மேளத்தின் தற்போதைய தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் அதன் முன்னாள் தலைவர் மணிலால் பர்னாந்து ஆகியோரை அழைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

கால்பந்து சம்மேளத்தின் நிறைவேற்று சபைக்கு 10 அங்கத்தவர்கள் தேர்தல் மூலம் நியமிக்கப்படுகின்றனர். எனினும், அதற்கு மேலதிகமாக 18 அங்கத்தவர்கள் தலைவர் மூலமாக நியமிக்கப்படுகின்றனர். இது சிக்கலான விடயம் என்று கோப் குழு சுட்டிக்காட்டியது. சம்மேளனத்தின் யாப்புக்கு அமைய இவ்வாறு இடம்பெற்றாலும் இது பெரும் சிக்கல் என்பதால் உடனடியாக தலையிடுமாறு விளையாட்டு அமைச்சின் செயலாளருக்கு கோப் குழு ஆலோசனை வழங்கியது. இவ்வாறு தலைவர் மூலமாக 18 அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவதை தடுக்கும் வகையிலான கட்டளையொன்றை விரைவில் வெளியிடுவோம் என்றும் விளையாட்டு அமைச்சின் செயலாளர் அனுராத விஜேகோன் தெரிவித்தார்.

இந்த விளையாட்டு சங்கங்களுக்கு தேர்தலை நடத்துவதற்கான தேர்தல் குழுக்களை சங்கங்களே அமைப்பதால் வெளிப்படைத்தன்மையின்றி இந்த நடவடிக்கை இடம்பெறுகின்றது என்று இக் குழு சுட்டிக்காட்டியது. கால்பந்து சம்மேளனத்தின் எதிர்வரும் தேர்தலுக்கான தேர்தல் குழுவின் தலைவருக்கு 7 லட்சத்து 40 ஆயிரம் ரூபா நிதியும் ஏனைய இரண்டு உறுப்பினர்களுக்கு 6 லட்சம் ரூபா நிதியும் வழங்கப்படுவதும் தெரியவந்தது. இது குழுவின் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகியது. தலைவரால் நியமிக்கப்படும் 18 அங்கத்தவர்கள் இருப்பதால் இவ்வாறான தீர்மானங்களை எடுக்கும்போது தலைவரின் தீர்மானத்துக்கு அப்பால் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதும் புலப்பட்டது.

நிதி மோசடிகள் தொடர்பில், நிதி மோசடி விசாரணைப் பிரிவு மூலம் விசாரணை நடத்தி நீதிமன்றத்தில் வழக்குகளைத் தாக்கல் செய்துள்ள பின்னணியில், இது போன்ற நிதி முறைகேடுகள் எதுவும் நடக்கவில்லை என்று கூறி சம்மேளனத்தின் தற்போதைய தலைவர் நீதிமன்றதுக்கு சத்தியக் கடதாசியொன்றை சமர்ப்பித்துள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது. இதுபோன்ற நிதி மோசடி நடந்திருப்பது தெரியவந்ததையடுத்து தற்போதைய தலைவர் நிதி மோசடி எதுவும் நடக்கவில்லை என்று சத்தியக் கடதாசி மூலம் அறிவித்திருக்கின்றார் என்றும், இது தீவிரமான விடயம் என்றும் குழு சுட்டிக்காட்டியது. (கு-இ)

### யுவதியை வழிமறித்து மோ.சைக்கிளுக்குத் தீ

வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த யுவதியை வழிமறித்தவர்கள், யுவதியின் மோட்டார் சைக்கிளுக்குத் தீ வைத்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று யாழ்ப்பாணம், ஆறுகால் மடம் பகுதியில் நடந்துள்ளது. யுவதியைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிள்களில் வந்த இளைஞர்களே யுவதியின் மோட்டார் சைக்கிளுக்குத் தீ வைத்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-26,25)

# பிரதேச செயலருக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பிரதேச செயலர் தன்னை பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றார் என்று குற்றம் சாட்டி, தையிட்டி பகுதியைச் சேர்ந்த குடும்பத்தலைவர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்.நல்லூரில் இருந்து தனது குடும்பப் பதிவை 2013ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதி நீக்கம் செய்து தையிட்டி கிராம அலுவலரிடம் குடும்பப் பதிவை மேற்கொண்டு பிரதேச செயலரிடம் குடும்ப பதிவு அட்டையைத் தருமாறு கோரியிருந்தேன். 7 வருடங்கள் கடந்தும் குடும்ப அட்டை தனது கைக்கு எட்டவில்லை என்று குறித்த முறைப்பாட்டில் குடும்பத் தலைவரான பா.பிரகாஷ் குறிப்பிட்டுள்ளார். குடும்ப அட்டை கிடைக்காமையால், அரச உதவிகள் பலவற்றை இழந்து வருகின்றேன் என்றும் அரசு வழங்கிய கொரோனா நிதி 5 ஆயிரம் ரூபாவைக்கூட தன்னால் பெறமுடியாமல் போயுள்ளது என்றும் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். (கு-20)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஹரினை கைதுசெய்யுமாறு அரசு முறையிடவே இல்லை!

*அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு*

கொழும்பு, ஏப்.24

நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை தொடர்பில் ஹரின் பெர்னாண்டோவைக் கைது செய்யுமாறு அரசு கோரிக்கை விடுக்கவில்லை. அவ்வாறு கைதுசெய்யவும் முடியாது. அதற்கு நாம் இடமளிக்கவும் போவதில்லை. ஆனால் நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி பிழையான தகவல்களை சமூக மயப்படுத்த முற்படுவது தவறான செயற்பாடாகும் என்று ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கு பதிலளிக்கும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஹரின் பெர்னாண்டோ விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிரணி பிரதம கொறடா ஆகியோர் முன்வைத்த குற்றச்சாட்டுகளை நிராகரிக்கின்றோம். குண்டுத் தாக்குதல் தொடர்பில் உண்மை கண்டறியப்பட வேண்டும், குற்றவாளிகளுக்குத்தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதுதான் அனைவரதும் எதிர்ப்பார்ப்பாகும். அதற்கு எதிர்க்கட்சி ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அதனை விடுத்து தாக்குதலை சேறுபூசிக்கொள்வதற்காகவும், அரசியலுக்காகவும் பயன்படுத்த வேண்டாம். நல்லாட்சி உரிய வகையில் செயற்பட்டிருந்தால் குறித்த தாக்குதல்கூட இடம்பெற்றிருக்காது. தாக்குதல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இதில் அரசுபின்நிற்காது.

நாடாளுமன்றத்தில் ஆற்றப்படும் உரை தொடர்பில் எவரையும் கைதுசெய்ய முடியாது.

ஹரின் பெர்னாண்டோ ஆற்றிய உரை தொடர்பில் விசாரணை நடத்துமாறுதான் எமது கட்சி எம்.பிக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர். மாறாக கைதுசெய்யுமாறு குறிப்பிட வில்லை. அவ்வாறு கைதுசெய்வதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். அதேபோல் நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி பிழையான கருத்துகளை வெளியிடக்கூடாது -என்றார் (ப-44)

ஈஸ்டர் தாக்குதல் விவரங்களை அம்பலப்படுத்தியதால்

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் ஹரின் எம்.பியை கைதுசெய்ய முயற்சி!

*சபையில் சஜித் கடும் ஆட்சேபனை*

**கொழும்பு, ஏப்.24**

**ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய தகவல்களை ஹரின்பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்தியுள்ள நிலையில், அவரை பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.**

இது நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறும் செயலாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போது கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குண்டுத் தாக்குதல் தொடர்பிலும், அதனுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றத்தின் ஊடாக நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தினார் ஹரின் பெர்னாண்டோ. அவரை பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்து, தடுத்துவைத்து விசாரிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என எமக்கு தகவல் கிடைத்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிடுவதற்கும், விவாதத்தில் ஈடுபடுவதற்கும் சுதந்திரம் சிறப்புரிமை இருக்கின்றது. அதனை நீதிமன்றத்தால்கூட சவாலுக்குட்படுத்த முடியாது. ஹரினை கைது செய்வதற்கு முயற்சிக்கும் அதிகாரிகள் நாடாளுமன்ற சிறப்புரிமைச் சட்டத்தை வாசிக்கவில்லையா?

ஹரின் பெர்னாண்டோ அவருக்கு கிடைத்த தகவல்களைத்தான் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் வெளிப்படுத்தினார். இதற்காக அவரை எவ்வாறு பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்ய முடியும்?

எனவே, தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகளை கைது செய்வதற்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்துங்கள்.

எதிரணி உறுப்பினர்களின் வாயை அடைப்பதற்கு பயன்படுத்த வேண்டாம். இது தொடர்பில் அரசு தெளிவுபடுத்த வேண்டும்- என்றார். (ப-44)

# ஹரினிடம் நலம் விசாரிப்பு

கொழும்பு,ஏப்.24

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார உள்ளிட்டோர் நேற்று நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர். சுகவீனம் காரணமாக ஹரின் பெர்னாண்டோ கொழும்பு தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை நாடாளுமன்றில் ஆளும் மற்றும் எதிர்த்தரப்பினருக்கிடையில் கடும் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. மறுநாள் ஹரின் பெர்னாண்டோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-4)



# புதுவருடக் கொண்டாட்டம்: 9 பேருக்கு கொரோனா

*வவுனியாவில் சமூகத்தொற்று*

வவுனியா, ஏப்.24

வவுனியாவில் 12 பேர் நேற்று கோரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் 9 பேர் புதுவருடக் கொண்டாட்டத்தை அடுத்து தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

வவுனியா கற்பகபுரம் பகுதியில் இரு குடும்பங்களைச் சேர்ந்த 9 பேருக்கும், சிறைச்சாலையில் ஒருவருக்கும், யாழில் இருந்து வந்த 2 பேருக்குமே கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

சித்திரை வருடப்பிறப்பைக் கொண்டாடுவதற்காக திருகோணமலையில் இருந்து வவுனியா கற்பகபுரத்தில் உள்ள உறவினர் வீட்டுக்கு வந்த நபர் ஒருவருக்கு, திருகோணமலையில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று இருப்பது நேற்றுமுன்தினம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் வந்து தங்கிய வவுனியா கற்பகபுரம் பகுதியில் உள்ள சிலருக்கு பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டிருந்தன. அதன் முடிவுகள் நேற்று கிடைக்கப் பெற்றன. அதற்கமைய 9 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது.

தமிழ், சிங்களப் புத்தாண்டை அடுத்து, கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று சுகாதாரப் பிரிவினர் எச்சரித்துவந்த நிலையில்; வவுனியாவில் இவ்வாறு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-110)

# ஹரினை விசாரணைக்கு அழைத்ததில் தவறில்லை

*பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு*

வவுனியா, ஏப். 24

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவை குற்றத் தடுப்புப் பிரிவினர் (சி.ஐ.டி.) விசாரணைக்கு அழைத்துள்ளனர். அவர்களது அதிகாரவரம்புக்கு உட்பட்டே செயற்பட்டுள்ளனர். இவ்வாறு பொலிஸ் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட அவர் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்;

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த பொலிஸாருக்கு பல்வேறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் அநாவசியமாக நடமாடித் திரிவதைத் தவிர்க்கவேண்டும்.

நாடு முடக்கப்பட வேண்டுமா இல்லையா என்பது தொடர்பில் சுகாதாரத்துறை அதிகாரிகளே தீர்மானிப்பார்கள். அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதேவேளை சஹ்ரானின் தீவிரவாதக் கருத்துக்களை சமூகவலைத்தளங்களில் வெளியிடுபவர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல்களை வழங்குமாறு கோருகின்றோம், -என்றார். (இ.110.18)




# கடைத் தொகுதிகளுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

மன்னார்,ஏப்.24

உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தும் நோக்கில் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் நிதிப் பங்களிப்பில் மன்னார் மடுச்சந்தியில் கடைத்தொகுதிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் தி.பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சர்வ மதத் தலைவர்கள் மற்றும் மடு உதவிப் பிரதேச செயலர் திருமதி வினோஜிதா ஆகியோர் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டனர். இந்த கடைத் தொகுதிகள் ரூபா 8 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு, மாமூலை, மகா விஷ்ணு ஆலய வருடாந்த உற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ச-246)

## 3 நூல்கள் வெளியீடு

சங்கானை, ஏப்.24

எஸ்.ரி.ரி.எஸ் பதிப்பகத்தின் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு பதிப்பகத்தின் இயக்குநர் எஸ்.ரி.திலக்ஸன் தலைமையில் சங் கானை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா குகதாஸ் மற் றும் வலிமேற்கு பிரதேசசபை தவிசாளர் தரும லிங்கம் நடனேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நூல் வெளியீட்டில் எஸ்.ரி.திஸ்னுகனின் 'தேடல்', ஆர்.சரணிகாவின் 'நாளைய நான்' மற்றும் எஸ்.ரி.அருள்குமரனின் 'சோலர்' ஆகிய நூல்கள் வெளியிடப்படவுள்ளன. (ச)

## 15 அடி ஆழம் கொண்ட நீரில் சென்று மீனவர்களைத் தாக்கியது யானை

### தெய்வாதீனமாகத் தப்பினர் மீனவர்கள்

கிளிநொச்சி, ஏப்.24

**கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடு பட்டிருந்த மீனவர்களைத் தாக்க முற்பட்ட காட்டு யானையிட மிருந்து தெய்வாதீனமாக மீனவர்கள் தப்பித்துக்கொண்டனர்.**



இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு 11 மணியளவில் இர ணைமடு குளப் பகுதியில் இடம்பெற் றுள்ளது. வழமைபோன்று நன்னீர் மீன்பிடி யில் ஈடுபடுவதற்காக மீனவர் கள் இரணைமடு குளத்துக்குச் சென் றுள்ளனர்.

அங்கு தமது வலைகளை முதலைகள் சேதப்படுத்தாமல் பாதுகாக்கும் வகை யில் மீனவர்கள் காவலில் ஈடுபட்டிருந் தனர். மீன்பிடி வள்ளத்திலேயே அவர் கள் உறங்கியுள்ளனர்.

இந்த நிலையில் காட்டுப்பகுதி ஊடாக குளத்துக்குள் புகுந்த யானை ஒன்று வள்ளத்தில் உறங்கிக்கொண்டிருந்த வர்களைத் தாக்கியுள்ளது.

அச்சத்தில் குளத்தினுள் பாய்ந்த மீன வர்கள் ஏனைய தொழிலாளர்களின் உதவியுடன் பாதுகாக்கப்பட்டுள்ள னர்.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் 15 அடி நீரின் ஆழம் கொண்டது என் றும், குறித்த பகுதிக்கு நீந்தி வந்தே அந்த யானை தம்மைத் தாக்க முற்பட் டது என்றும் மீனவர்கள் தெரிவிக்கின் றனர். மீனவர்கள் தெய்வாதீனமாக தப்பித்துக்கொண்டாலும், அவர்கள் பயன்படுத்திய மீன்பிடிப் படகு சேதம டைந்துள்ளது. (ப-6)

## மாஸ்க் அணிவது கட்டாயம்: மீறுவோர் மீது சட்டம் பாயும்

சாவகச்சேரி,ஏப். 24

"தென்மராட்சி பிரதேசத்தில் முகக் கவசம் அணிவது நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் கட்டாயமாக்கப்பட் டுள்ளது. முகக்கவசம் அணி யாமல் காணப்படுவோர் கட் டாய பி.சி.ஆர். பரிசோத னைக்கு உட்படுத்தப்படுவது டன், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்" இவ்வாறு சாவகச்சேரி சுகா தாரப் பகுதியினர் அறிவித்துள் ளனர்.

மேலும், தென்மராட்சி பிரதே சத்தில் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ள குடும் பங்க ளைச் சேர்ந்த 30 பேருக்கும் வடமாகாண சபையின் செய லகத்தில் கடமையாற்றும் 34 அலுவலர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது. இவர்களில் மூவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து நேற்று வெள் ளிக்கிழமை தொடக்கம் சுகா தாரப் பகுதியினரும், பொலி ஸாரும் இணைந்து. தென்மரா ட்சி பகுதியில் தீவிர கண்கா ணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ள னர் - என்றனர். (ஐ-9)

## புங்குடுதீவு பிரதேசத்துக்கு பல்வேறு நலத்திட்டங்கள்

புங்குடுதீவு,ஏப்.24

புங்குடுதீவு சைவ இளைஞர் சங்கத்தினரால், புங்குடு தீவு பிரதேசத்தில் பல்வேறு நலத்திட்டங்கள் முன்னெ டுக்கப்பட்டன. புங்குடுதீவு இராஜேஸ்வரி வித்தியாசா லைக்கு கணினித்தொகுதி மற்றும் அலுவலக மேசை போன்றவை வழங்கப்பட்டன.

அத்துடன் அமரர். இராஜகோபாலன் விஜயலட்சுமியின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவ ரது குடும்பத்தினரின் நிதியுதவியில் மாணவர்களுக்கு பாதணிகள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன. நிகழ்வில் புங்குடுதீவு சைவ இளைஞர் சங்க உறுப்பி னர்களான கருணாகரன் நாவலன் ( வேலணை பிர தேச சபை உறுப்பினர் ) , சபா .பரமேஸ்வரன் (தலைவர் புங்குடுதீவு உலக மையம் ) மற்றும் சுதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)





## ஜனாதிபதி தங்க கிண்ண கரப்பந்தாட்டத்தில் பளை அதிசயம் வி.கழகம் தேசிய மட்டத்துக்கு தெரிவு

யாழ்ப்பாணம், ஏப் 24

ஜனாதிபதி தங்க கிண்ண கரப்பந்தாட்டப் போட்டியில் பளை அதிசயம் விளையாட்டுக்கழகம் தேசிய மட்ட போட்டிக்குத் தெரி வாகியுள்ளது. வடக்கு மாகாண ரீதியில் இடம்பெற்ற ஜனாதிபதி தங்க கிண்ண கரப்பந்தாட்ட பெண்களுக்கான போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கிளிநொச்சி மாவட்டத் தின் பளை பிரதேசத்தைச் சேர்ந்த அதிசயம் விளையாட்டுக்கழகம் கலந்துகொண்டு இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இறுதிப்போட்டியில் கரவெட்டி கருணாகரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்கொண்டு அதிசயம் பெண்கள் அணியினர் 2:0 என்ற அடிப்படையில் செற்களை வெற்றி கொண்டு தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். (ச- 6)

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

கொடிகாமம், ஏப்.24

மீசாலை வடக்கு வேம்பிராய் கான் றைச்சாட்டி அலாக்கிரக பூதவரத விநா யகர் ஆலயத்தின் சித்திரத்தேர் வெள் ளோட்டம் நாளை 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியி லிருந்து 10.30 மணிவரையுள்ள சுப வேளையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி சங்கத் தானை ஆலய பிரதமகுரு சிவசிறி தே.கௌரிசங்கரக் குருக்கள் ஆசியு ரையையும் தெல்லிப்பழை சிறிதுர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் வாழ்த்துரை யையும் வழங்கவுள்ளனர். (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## உங்களுக்கு வெட்கமில்லையா?

ஈஸ்டர் தாக்குதலின் இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள், தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் கடந்த 21ஆம் திகதி நடைபெற்றன. இதன்போது பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, அறச் சீற்றத்துடன் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

'ஈஸ்டர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் முஸ்லிம் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் நாம் பாதுகாத்தோம். எமக்கான நியாயத்துக்கு குரல் கொடுப்பதற்கு முஸ்லிம் மக்கள் முன்வரவில்லை. எனினும் நிகழ்வில் பங்கேற்ற ஹசன் மௌலான மௌலவி குரல் கொடுத்துள்ளார்' என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். அது நியாயமானதுதான். ஈஸ்டர் தாக்குதலில் கொல்லப்பட்ட 269 உயிர்களுக்கும் நீதி வேண்டிய பயணத்தின் முடிவு தெரியாத கோபத்தில் அவர் கொந்தளிப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியது. அப்பாவி உயிர்களின் சாவுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். குற்றவாளிகள் தப்பிக்கக்கூடாது. அவருடன் சேர்ந்து எல்லோரும் குரல் எழுப்பவேண்டும்தான்.

இங்கேதான் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையைப் பார்த்து 'உங்களுக்கு வெட்கமில்லையா?' என்ற கேள்வியை எழுப்பவேண்டியிருக்கின்றது.

269 உயிர்களுக்கான நீதிக்கான பயணத்தில் முஸ்லிம் சகோதரர்கள் குரல் எழுப்பவில்லை என்று ஆதங்கப்படும் உங்களுக்கு, இதே நாட்டில் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களுக்காக, உங்கள் மொழியில் சொல்ல வேண்டுமானால் கொல்லப்பட்ட அப்பாவி கிறிஸ்தவ மக்களுக்காக, கிறிஸ்தவ மதகுருமாருக்காக ஏன் நீங்கள் குரல் எழுப்பவில்லை? கிறிஸ்தவ தேவாலயங்களில் தஞ்சமடைந்தவர்கள் கொல்லப்பட்டபோது மௌனம் காத்துக்கொண்டதன் அர்த்தம் என்ன?

இவை எல்லாவற்றையும் தாண்டி, இறுதிப் போரில் வகைதொகையின்றி கொல்லப்பட்ட மக்களுக்காக மறைந்த மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தொடர்ந்து குரல் எழுப்பிக் கொண்டிருந்தார். அந்த மக்களுக்கான நீதிக் கோரிக்கையை முன்வைத்தார். இலங்கை அரசுகள் நீதியைத் தராது என்ற வரலாற்றுப் படிப்பினை காரணமாக சர்வதேச நீதியை ஆணித்தரமாக வலியுறுத்தி வந்தார். பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களே நீங்கள் என்ன செய்தீர்கள்? சர்வதேச விசாரணை கோரும், மறைந்த ஆயர் இராயப்பு ஆண்டகையின் முயற்சிகளைக் கண்டித்தீர்கள். (இப்போது ஈஸ்டர் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணையைக் கோருவோம் என்று நீங்கள் கூறிவருகின்றீர்கள்)

பேராயர் அவர்களே, நீதிக்கான உங்கள் முயற்சிகளில் கரம் கோர்க்கவில்லை என்று முஸ்லிம் மக்களைப் பார்த்து கேள்வி எழுப்பிய அதே நாளில், நாடாளுமன்றில் உரையாற்றிய தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், போரில் கொல்லப்பட்ட பச்சிளம் குழந்தைகளுக்காக நீங்கள் (பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை) ஏன் குரல் எழுப்பவில்லை என்று கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு முன்னரும் அவர் அந்தக் கேள்வியை முன்வைத்தபோதும் நீங்கள் இன்று வரை அதற்குப் பதிலளிக்காது அமைதி காத்து வருகின்றீர்கள்.

ஆனால், நீதிக்காக நீங்கள் குரல் எழுப்பவில்லை என்பதற்காக உங்கள் நீதிக்கான பயணத்தில் தமிழ் பேசும் மக்கள் கைகோர்க்காமல் இருக்கப்போவதில்லை. இருந்ததுமில்லை.

இதனையே, யாழ்ப்பாண மறைமாவட்ட குரு முதல்வர் மிகத் தெளிவாக - உங்கள் கன்னத்தில் அறைவது போன்று அதனை - உங்கள் வழிகாட்டியான இறைவனின் போதனைகளிலிருந்தே எடுத்துரைத்திருக்கின்றார்.

'பிறர் உங்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்களோ அவற்றை எல்லாம் நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள் என்று ஆண்டவர் எங்களுக்கு உபதேசிக்கின்றார்' என அச்சொட்டாக அடித்துரைத்துள்ளார்.

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களே, இனியாவது மற்றவர்களை நோக்கி நீங்கள் சுட்டு விரலை நீட்ட முன்னர் உங்களை ஒரு தரம் சுய பரிசோதனை செய்து கொள்ளுங்கள்.



# பசிலுக்கு பின்னடைவாகும் சகாக்களின் பதவி விலகல்கள்

**கொழும்பு, ஏப். 24**

**அரசை மறைகரமாக இயக்கிவரும் பசில் ராஜபக்சவுக்கு நெருக்கமான சிலர், நெருக்குதல் காரணமாக தமது பதவிகளைத் துறந்து செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவராக இருந்த ரேணுகா பெரேரா அண்மையில் பதவி விலகினார். இவர் சிறிலங்கா பொதுஜன பெரமுனவை நிறுவுவதில் கடுமையாக உழைத்தவர். பசில் ராஜபக்சவுக்கு மிகவும் நெருக்கமானவர். இராஜாங்க அமைச்சரின் அதீத தலையீடு காரணமாக தனது பதவியைத் துறக்கிறேன் என அவர் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், நிறுவனங்களின் தலைவர்கள் திறம்படச் செயலாற்றவில்லை என்றால் அவர்களை மாற்றுவேன் என்று இராஜாங்க அமைச்சர்களுடனான சந்திப்பில் கூறியிருந்தார்.

இதேவேளை அரச கூட்டுக்கு இடையிலான மோதலுக்கும் பசில் ராஜபக்சவே காரணம் என்று கூறப்படும் நிலையில், அவருக்கு வேண்டப்பட்டவர்கள் முக்கிய பதவிகளிலிருந்து எதிர்காலத்திலும் நீக்கப்படும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது. (ஒ.இ)

# சமையல் எரிவாயு சிலிண்டர் விற்பனையில் நூதன மோசடி

கொழும்பு, ஏப். 24

சமையல் எரிவாயு சிலிண்டரில் கிலோ கிராம் என்று எடையைக் குறிப்பிட்டே விற்பனை செய்யவேண்டும் என்ற நியதி உள்ள நிலையில், லீற்றரில் அதனைக் குறிப்பிட்டு விற்பனை செய்துள்ளமை தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை கவனம் செலுத்தியுள்ளது.

இலங்கையில் எரிவாயு சிலிண்டரை விற்பனை செய்யும் இரண்டு நிறுவனங்களில் ஒரு நிறுவனமே இந்தச் செயற்பாட்டை மேற்கொண்டுள்ளது. இவ்வாறு லீற்றரில் குறிப்பிட்டு சந்தைக்கு வழங்கிய அனைத்து சிலிண்டர்களையும் மீளப் பெறுமாறு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

12.5 கிலோ கிராம் நிறையுடைய சிலிண்டருக்கே கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் 18 லீற்றர் என்று குறிப்பிட்டு கட்டுப்பாட்டு விலையிலும் நூறு ரூபா குறைவாக சிலிண்டர் விற்கப்பட்டுள்ளது. சிலிண்டரின் நிறையைக் குறைத்து விற்பனை செய்வதற்காகவே லீற்றரில் கொள்ளளவை குறிப்பிட்டிருக்கவேண்டும் என்று நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ஒ.இ)

தொல்பொருள்களான

# புதையலில் கிடைத்த நாணயங்களை விற்பதற்கு முயன்றவர் கைதானார்!

மன்னார், ஏப்.24

புதையலில் இருந்து கிடைக்கப் பெற்ற தொல்பொருள் நாணயக்குற்றிகளை விற்பனை செய்ய முயன்ற இளைஞர் ஒருவரை மன்னார் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

மன்னார் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுள்ள வீரசிங்க, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராய்ச்சி மற்றும் மன்னார் மாவட்ட விசேட விசாரணைப் பிரிவு தற்காலிக பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் மேற்படி தொல்பொருள் நாணயம் என கூறப்படும் 257 நாணயக் குற்றிகளை கைப்பற்றியுள்ளதுடன், பெரிய பண்டிவிரிச்சான் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த நபரை மன்னார் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் விசாரணையின் பின் குறித்த நபர் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதுடன், மீட்கப்பட்ட நாணயக்குற்றிகளும் மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட உள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-56)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரோனாவின்

# புதிய வைரஸை பி.சி.ஆர். ஊடாக இனம்காண்பது மிகக் கடினம்

கொழும்பு, ஏப். 24

கொரோனாவின் மாற்றமடைந்த வைரஸை தற்போதுள்ள பி.சி.ஆர். சோதனைகள் ஊடாக கண்டறிந்து கொள்ளமுடியாது என்று ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் உயிரியல் நிறுவனத்தின் இயக்குநர் மருத்துவர் சந்திம ஜீவசுந்தர தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

கொரோனாவின் உருமாறிய வைரஸ் பிரிட்டனில் பரவியது. இதனைக் கண்டறிவதற்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனை அங்கும் தோல்வி கண்டது. வைரஸில் உள்ள எஸ் புரதங்கள் காரணமாகவே பி.சி. ஆர். சோதனையில் அதனைக் கண்டறிவதற்கு கடினமாக உள்ளது.

சிறப்பு பி.சி.ஆர். சோதனைக் கருவிகளை இலங்கைக்கு கொண்டு வருமாறு கோரப்பட்டுள்ளது. அடுத்த வாரம் அவை கிடைக்கப்பெறும். அதன் பின்னர் சோதனைகள் ஆரம்பமாகும்.

கடந்த இரண்டு வாரங்களில் அதிக அளவான இளைஞர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களின் மாதிரிகளில் எஸ் புரதத்தை அடையாளம் காண்பது சிரமமாக உள்ளது. இது பிரிட்டனில் பரவிய உருமாறிய வைரஸை ஒத்ததாகவே காணப்படுகின்றது, என்றார். (ஒ.இ)

## மணமக்களுக்கு கொரோனா 120 பேர் தனிமைப்படுத்தலில்

கொழும்பு.ஏப்.24

திருமணத்தில் இணைந்து கொண்ட மணமக்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து, அவர்களது திருமண நிகழ்வில் கலந்துகொண்ட 40 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் வத்தளை - ஹெந்தலப் பகுதியில் நடந்துள்ளது. திருமணத் தம்பதியினர் வெலியமுனப் பகுதியைச் சேர்ந்தவர்கள். மணமகளின் சகோதரிக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்த பகுதிக்குப் பொறுப்பான சுகாதாரத் தரப்பினர் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்தி வருகின்றனர். (ப-4)

## டில்லியைப் போன்று கொழும்பும் மாறலாம்

எச்சரிக்கிறது சுகாதார ஆய்வாளர்கள் சங்கம்

கொழும்பு, ஏப். 24

கொரோனாப் பாதிப்பைக் கட்டுப்படுத்துவற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் இந்தியாவின் புதுடில்லி போன்று கொழும்பும் மாறும் அபாயம் இருக்கின்றது. இவ்வாறு சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் பொதுச் செயலர் எம்.பாலசூரிய தெரிவிக்கையில்:

தமிழ் சிங்களப் புத்தாண்டைத் தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளிலும் துணைக் கொத்தணிகள் உருவாகியுள்ளன. தொற்றுக்குள்ளான நபர்கள் ஓரிடத்திலிருந்து வேறுவேறு இடங்களுக்கு பயணித்துள்ளனர். இந்தத் தொற்றாளர்களில் ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்களும் அடங்குகின்றனர். சில ஆடைத் தொழிற்சாலைக் கொத்தணிகளும் கண்டறியப்பட்டுள்ளன.

அபாயக் கட்டத்தை நோக்கிச் செல்லும் நிலையில் இதனைக் கட்டுப்படுத்த சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒரு நாளைக்கு பி.சி.ஆர். சோதனைகளை 15 ஆயிரமாக மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆபத்தான நிலைமையைக் கட்டுப்படுத்த மேலும் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். தவறினால் இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் தற்போது ஏற்பட்டுள்ளதைப்போன்று மிக மோசமான நிலைமை கொழும்பிலும் ஏற்படும், என்றார். (ஒ.இ)

## சுகாதாரத்தை மீறியதால் மக்களுக்கு வந்த வினை

தொற்றாளர்கள் அதிகரிப்பு என்கிறார் இராணுவத் தளபதி

கொழும்பு.ஏப்.24



சுகாதாரத்துறையினர் வழங்கும் வழிகாட்டல்களை மக்கள் பின்பற்றுவது அவசியமாகும். ஆனால் பண்டிகைக் காலத்தில் மக்கள் இதுபற்றிக் கூடுதல் கவனம் செலுத்தவில்லை. அதனால் நாட்டில் கொரோனாத் தொற்று மீண்டும் அதிகரித்துள்ளது. இவ்வாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் கடந்த சில வாரங்களாக கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அதனால் கொரோனாத் தொற்று மிகவும் வேகமாக பரவும் எந்த இடத்தையும் தனிமைப்படுத்த நேரிடும். நோய் பரவலைக் கருத்தில் கொண்டு பாடசாலைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதா என்பது பற்றியும் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ப-4)

## பங்கேற்போர் தொகையை மட்டுப்படுத்த ஆலோசனை

கொழும்பு.ஏப்.24



திருமண மற்றும் மரணச் சடங்குகள் உள்ளிட்ட நிகழ்வுகளில் கலந்து கொள்வோரின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கு ஆலோசிக்கப்படுகின்றது என்று கொவிட் தொற்றுத் தடுப்புக்கான இராஜாங்க அமைச்சர் விசேட மருத்துவர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதால், இவ்வாறான நிகழ்வுகளில் கலந்துகொள்வோர், இதற்கு முன்னர் பின்பற்றப்பட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது அவசியம்.

அதனால் இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்வோரை எவ்வாறு மட்டுப்படுத்துவது என்பது தொடர்பில் ஆலோசிக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-4)

## நோயாளர்கள் அதிகரித்தால் இறப்புக்களும் அதிகரிக்கலாம்!

மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

கொரோனாத் தொற்றால், மருத்துவமனைகளின் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கத்தக்க எண்ணிக்கையை விட, அதிக நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டால், இறப்புகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கக்கூடும் என்று மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் பிரசாத் கொலம்பகே தெரிவிக்கையில்,

நாட்டில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தத் தவறினால், அது மற்றொரு லொக்டவுன் அல்லது கடுமையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும்.

சாத்தியமான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதை உறுதிசெய்ய கடந்த ஆண்டும் மீண்டும், மீண்டும் இதே செய்தி வெளியிடப்பட்டது. இப்பொழுது மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது.

முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியைப் பேணுவது உள்ளிட்ட அனைத்து சுகாதார நடைமுறைகளையும் கடைப்பிடிப்பதன் மூலம், தங்கள் பொறுப்புகளை மக்கள் உணர வேண்டும். வேகமாகப் பரவி வரும் திரிபடைந்த கொரோனா வைரஸால் இளைஞர்களே அதிகம் பாதிக்கப்படுவதால், மக்கள் விழிப்புடன் இருப்பது மிக அவசியம் -என்றார். (ப-4)

## திருகோணமலையிலும் எகிறுகிறது தொற்று

24 மணிநேரத்தில் 46 தொற்றாளர்கள் அடையாளம்

திருகோணமலை, ஏப்.24

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 46 கொவிட்19 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர், வீ.பிரேமானந்த் தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள பிராந்திய சுகாதார அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

திருகோணமலையில் சடுதியாக கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளது. சித்திரைப் புத்தாண்டு காலத்தில் மக்களின் அதிகரித்த நடமாட்டம் மற்றும் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களின் இங்கு வந்து சென்றமை ஆகிய காரணங்களால், ஏப்ரல் மாதத்துக்குள் இற்றை வரை சுமார் 310 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் உப்புவெளி மற்றும் திருகோணமலை நகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் அதிகமான கொவிட் தொற்றாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். சுகாதார நடை முறைகளைப் பின்பற்றாமை போன்ற காரணங்களால் இவ்வாறு சடுதியான தொற்று அதிகரித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் உப்புவெளி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 17 பேரும், திருகோணமலையில் 15 பேரும், தம்பலகாமத்தில் மூவரும், மூதூரில் 1 மற்றும் குச்சவெளியில் தலா ஒருவரும், கந்தளாயில் 9 பேரும் என மொத்தமாக 46 தொற்றாளர்கள், இனங்காணப்பட்டுள்ளனர்.

திருகோணமலைப் பகுதியில் இரு பாடசாலைகளில் பணியாற்றும்



உத்தியோகத்தர்கள் இருவருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளது. இதனால் பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவாகவும் உள்ளது. இனி வரும் இரண்டு மூன்று வாரங்கள் ஆபத்தான காலமாகும். பொது மக்கள் இறுக்கமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மீறினால் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள நேரிடும் - என்றார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனவளத் திணைக்களத்திடமிருந்து துவரங்குளத்தை விடுவிக்குக

## விவசாயிகள் கோரிக்கை

**முல்லைத்தீவு, ஏப்.24**

**முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் துவரங்குளத்தை வனவளத் திணைக்களத்திடம் இருந்து விடுவித்துத்தருமாறு அந்தப் பகுதி விவசாயிகள் முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

விவசாயிகள் மேலும் தெரிவிக்கையில் ;

மாந்தை கிழக்கின் வன்னிவிளாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் துவரங்குளம் அமைந்துள்ளது. 120 ஏக்கர் வரையான நிலப்பரப்புக்கு நீர்ப்பாசனம் செய்யக் கூடிய இக்குளத்தில், 60 வயல் நில அனுமதிப் பத்திரங்கள் உள்ள விவசாயிகள் உள்ளனர். பாண்டியன்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தின் கீழ் இக்குளம் உள்ளது. 2014ஆம் ஆண்டில் குளம் சீரமைக்கப்பட்ட நிலையில் தற்போது வனவளத்திணைக்களத்தின் பிடியில் அது உள்ளதால், குளத்தின் கீழ் விவசாய முயற்சிகளை மேற்கொள்ள முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். குறித்த குளத்தை விடுவிக்கக் கோரி கடந்த பல ஆண்டுகளாக மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் குரல் எழுப்பப்பட்டு வந்தாலும் இதுவரை குளம் விடுவிக்கப்ப ட வில்லை.

கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற வவுனிக்குளம் சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்திலும் இக்குளம் வனவளத் திணைக்களத்தின் பிடியில் உள்ளது என்றும், குளத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மேலதிக மாவட்டச்செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

எனவே துவரங்குளத்தை விடுவிப்பதற்கு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். (ஐ13)



# சமூகசேவைகள் பிரிவுக்கு புதிய கட்டடம் கையளிப்பு

வவுனியா,ஏப்.24

வவுனியா பிரதேச செயலகத்தில் சமூகசேவைகள் பிரிவுக்காக அமைக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதி மக்கள் பாவனைக்காக நேற்று திறக்கப்பட்டது.

நிகழ்வில் விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலர் நா.கமலதாசன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபனின் இணைப்பு செயலாளர் கி. தினேஸ் ஆகியோர் கலந்துகொண்டு கட்டடத்தை நாடாவெட்டி திறந்து வைத்தனர்.

தொடர்ந்து நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் பொருண்மியம் நலிந்த குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டன. (ஐ-110)

# 27,568 அபாயகரமான வெடிபொருள்களை முல்லை, கிளிநொச்சியில் அகற்றியது 'ஸார்ப்'



கிளிநொச்சி, ஏப்.24

'ஸார்ப்' நிறுவனத்தால் இதுவரை 27ஆயிரத்து 568 அபாயகரமான வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று அதன் நடவடிக்கை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணி வெடி அகற்றலில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் மனிதாபிமான கண்ணி வெடி அகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2021 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை மற்றும் ஆனையிறவிலும் 16 லட்சத்து, 36 ஆயிரத்து 204 சதுரமீற்றர் பரப்பளவிலிருந்து 27ஆயிரத்து 568 அபாயகரமான வெடிபொருள்களை அகற்றியுள்ளது. தொடர்ந்து இந் நிறுவனம் கண்ணிவெடி அகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றது- என்றார். (ப-6)

# நல்லூர் பிரதேச சபையால் அழகுபடுத்தல் வேலைத்திட்டம்

நல்லூர்,ஏப்.24

உலக பூமி தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையினரால் அழகுபடுத்தல் வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

முதற்கட்டமாக நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட செம்மணி வீதியில் உள்ள பனை மரங்களை அழகுபடுத்தும் வேலைத்திட்டம் தவிசாளர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். பிரதேச சபைக்குட்பட்ட பகுதியை அழகுபடுத்துவதற்கென பிரதேச சபையால் 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-20)



# நகர வர்த்தகர்களுக்கு எழுமாற்று பி.சி.ஆர்.

சாவகச்சேரி,ஏப்.24

சாவகச்சேரி நகரப் பகுதியில் சித்திரைப் புதுவருட வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்கள் 63 பேருக்கு எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனை நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

கொரோனா அச்சம் காரணமாக யாழ்.நகர வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதால் பபல பிரதேசங்களைச் சேர்ந்த பொதுமக்கள் சாவகச்சேரி நகரப் பகுதி மற்றும் சந்தைப் பகுதியில் புதுவருடத்துக்கான பொருள்களை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டினர். இதனால் வியாபார நிலையங்களை நடத்திய புடவை மற்றும் தேநீர்ச்சாலை போன்றவற்றில் கடமையாற்றிய அனைவரையும் வருகைதந்து பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவித்திருந்தனர்.

இதன் பிரகாரம் நேற்றுமுன்தினம் காலை வியாபாரிகள் மற்றும் அவ்வேளையில் அங்கு பணியாற்றுவோர் என 63 பேர் வருகை தந்திருந்தனர்.

இவர்களிடம் பெறப்பட்ட மாதிரிகள் ஆய்வுக்காக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஐ-9)

# மன்னார் தோட்டவெளி காட்டுப் பகுதியில் மணல் அகழ்வு நிறுத்தப்பட்டதால் கல் அரிந்து விற்பனை தீவிரம்

## கிராம அபிவிருத்திச் சங்கம் கவலை

மன்னார், ஏப்.24

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தோட்டவெளி கிராமத்தில் அண்மைக் காலமாக இடம் பெற்று வந்த சட்டவிரோத மண் அகழ்வு நிறுத்தப்பட்டுள்ள நிலையில், தற்போது குறித்த பகுதியில் சட்ட விரோதமான முறையில் பெரும் கிடங்குகள் தோண்டப்பட்டு அந்த மண்ணைப் பயன்படுத்தி கல் அரிந்து விற்பனை செய்யும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன என்று தோட்டவெளி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் தோட்டவெளி கிராமம் அமைந்துள்ளது. குறித்த கிராமத்தில் உள்ள காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் அண்மைக் கால்மாக காடுகள் அழிக்கப்பட்டு, மண் அகழ்வு இடம் பெற்று வந்தது. பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் தற்போது குறித்த பகுதியில் மண் அகழ்வது தடை செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் குறித்த காட்டுப்பகுதியில் தற்போது இரண்டு பெரும் கிடங்குகள் தோண்டி மண் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு கல் அரிந்து வேறு இடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யும் நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன.

இயந்திரங்கள் மற்றும் வேலைக்கு ஆள்களை வைத்து சட்டவிரோதமான முறையில் பெரும் கிடங்குகள் தோண்டப்பட்டு மண் அகழ்வு இடம்பெற்று, அவ்விடத்திலேயே கல் அரிந்து வேறு இடங்களுக்கு கொண்டுசெல்லப்படுகிறது. இவ்விடயம் தொடர்பாக கிராம அலுவலருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டச் செயலர், மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் ஆகியோரின் கவனத்துக்கும் இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பில் உரிய நடவடிக்கையை உடனடியாக முன்னெடுக்கவேண்டும் என்றனர். (ஐ-60)

# கசிப்புடன் ஒருவர் கைது

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம் பொக்கணை பகுதியில் விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 20 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஐ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்வர்களுக்கு விடுதலை; இதுவே அரசின் நடைமுறை

## அநுரகுமார சாடல்



கொழும்பு, ஏப். 24

**கள்வர்களை விடுவிப்பதும், குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்களை கைதுசெய்து சிறையிலடைப்பதையும்தான் இந்த அரசு மேற்கொள்கின்றது. இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்: அவர் மேலும் தெரிவிக்கையில்: மோசடிகள் தொடர்பில் ஏதாவது குற்றச்சாட்டை முன்வைத்தால், முன்னைய அரசின் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க என்னை அழைத்து விசாரிப்பார். அவருக்கு போதிய தகவல்களை வழங்குவேன். இப்போது அரசின் தலைவராக இருக்கின்ற ஜனாதிபதி கோத்தாபய என்னை அழைக்க மாட்டார். அவர் அழைத்தால் அவருக்கும் தகவல்களை வழங்குவேன். நாட்டில் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்காக பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் சிறார்கள் தாங்கள் உண்டியலில் சேர்த்த காசுகளை நாட்டுக்காக வழங்கினார்கள். அவர்களின் பணத்தில் மிக் விமானத்தைக் கொள்வனவு செய்கிறோம் எனக் கூறி பல மில்லியன் ரூபாக்களை கொள்ளையடித்தார் உதயங்க வீரதுங்க. அப்படிப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும் என்று இந்த ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. அப்படிக் கொள்ளையடித்தவர்களை விடுவிக்கவேண்டுமா?, என்று கேள்வி எழுப்பினார். (ஒ.இ)

# மரை இறைச்சி எனக் கூறி பணத்தை சுருட்டிய ஆசாமி

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஏப். 24

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் மரை இறைச்சி தருகிறேன் எனக் கூறி 10க்கும் மேற்பட்ட குடும்பங்களிடம் பணத்தைச் சேகரித்த நபர், இறைச்சி வழங்காமல் ஏமாற்றியுள்ளார். குறித்த கிராமத்தில் உள்ள வீடுகளுக்குச் சென்ற நபர், மரை இறைச்சி தன்னிடம் உள்ளது எனவும், ஒரு கிலோ மரை இறைச்சி 800 ரூபா என்றும் தெரிவித்துள்ளார். இதனை நம்பிய பலர் இறைச்சிக்கான பணத்தை அவரிடம் வழங்கியுள்ளனர்.

எனினும் 3 நாள்கள் கடந்த நிலையிலும் பணம் வழங்கியவர்களுக்கு இறைச்சி வழங்கப்படவில்லை. இதனால் குறித்த நபர் தம்மை ஏமாற்றியுள்ளார் என்பதை பின்னரே பாதிக்கப்பட்டோர் உணர்ந்தனர். (ஐ-110)



## யானைகளால்

# தெளிகரை கிராமத்தில் 70 தென்னைகள் நாசம்

கிளிநொச்சி, ஏப். 24

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச சபைக்கு உட்பட்ட தெளிகரை கிராமத்துக்குள் புகுந்த யானைகள் கிராமத்தில் 70க்கும் மேற்பட்ட பயன்தரும் தென்னை மரங்களை அழித்துள்ளன. குறித்த யானைகள் வளர்ப்பு யானைகள் என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; கடந்த புதன்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பாக பலருக்கு அறிவித்துள்ளோம். கிளிநொச்சி மாவட்டச் செயலர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் எவரும் இதுவரை அழிவுகளை வந்து பார்வையிடவில்லை. இதில் குடும்பப் பெண் ஒருவரும் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு நிவாரணம் கொடுக்க வேண்டிய கடமை இந்த அரசுக்கு உண்டு. கிராமத்து பிரதேச சபை உறுப்பினர், கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு இந்தத் தகவலை உரியவரிடம் கொண்டு சேர்க்க வேண்டிய கடமை உண்டு. இது போன்ற நாசகார வேலைகளை திட்டமிட்டு செய்கிறார்களா? என்ற கேள்வி எமக்குள் எழுந்துள்ளது - என்றனர். (ப-222)

# கைதிகளை பார்வையிட 2 வாரங்கள் தடை

கொழும்பு, ஏப். 24

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் கைதிகளைப் பார்வையிடுவதற்கு இன்று முதல் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு இந்த தற்காலிகத் தடை தொடரும். கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ப-4)

# யாழ். வலய நிதிக்கிளை பணியாளருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் நிதிக்கிளையில் பணியாற்றும் அலுவலர் ஒருவருக்கு நேற்றுமுன்தினம் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து குறித்த கல்வி வலயத்தின் நிதிக்கிளை மூடப்பட்டுள்ளது.

அந்தப் பிரிவில் பணியாற்றும் 17 அலுவலர்களும் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலியைச் சேர்ந்த மேற்படி அலுவலரின் மாமனாருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அலுவலர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்தே யாழ். கல்வி வலய நிதிக் கிளை மூடப்பட்டுள்ளது. (ஒ.இ)

# கடற்படை வாகனம் மோதி புங்குடுதீவு மாணவி காயம்

யாழ்ப்பாணம், ஏப். 24

புங்குடுதீவில் கடற்படை வாகனம் மோதி, பாடசாலை மாணவியொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை, 4ஆம் வட்டாரம், தம்பர் கடை சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. புங்குடுதீவு சுப்ரமணிய மகளிர் வித்தியாலய மாணவியொருவரே படுகாயமடைந்துள்ளார். அவர் உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (ப)

# வாகன பாதுகாப்பு கட்டணம் அதிகரித்தால் சந்தைக் குத்தகை நிறுத்தப்படும்

## வலி.தென்மேற்கு தவிசாளர் எச்சரிக்கை

வலி.தென்மேற்கு, ஏப். 24

காக்கைதீவு மீன் சந்தையில் அறவிடப்படும் வாகனங்களுக்கான பாதுகாப்பு கட்டணத்தை இரு மடங்காக அதிகரிக்க வேண்டும் என்று சில உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கையை நிராகரித்த தவிசாளர், இவ்விடயம் குறித்து அடுத்த வருடம் ஆராயலாம் என்றும், ஒப்பந்தத்தை மீறி கூடுதலான கட்டணம் அறவிடப்படுமானால், சந்தைக் குத்தகையை இரத்துச் செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் காக்கைதீவு இறங்குதுறையில் இயங்கும் பகல் நேர மீன் சந்தையை குத்தகைக்கு எடுத்தவர் வாகனங்களுக்கான பாதுகாப்புக் கட்டணத்தை இரு மடங்காக அறவிட்டு வருகின்றார். இச் செயற்பாடு குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவித்தது மட்டுமல்லாமல், பிரதேச சபை உறுப்பினர்களும் மாதாந்த கூட்டங்களில் சுட்டிக்காட்டியதுடன் சந்தைக் குத்தகைக்காரர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அறவிடப்படும் பாதுகாப்புக் கட்டணம் பற்றி சந்தையில் விளம்பரப்படுத்த வேண்டும் என்றும் உறுப்பினர்கள் தவிசாளரிடம் கோரியிருந்தனர். எனினும் 28 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் சபையில் 8 உறுப்பினர்கள் இணைந்து வாகனங்களுக்கான பாதுகாப்பு கட்டணத்தை இரு மடங்காக அதிகரிக்க வேண்டும் என்று எழுத்து மூலம் கோரியிருந்தனர். இது குறித்து கருத்து தெரிவித்த உப தவிசாளர் ஆ.சி.கணேசவேல், பாதுகாப்பு கட்டணம் இரு மடங்காக அதிகரிக்குமானால் பொதுமக்கள் பாதிக்கப்படுவர் என்பதுடன் ஏனைய சந்தைகளும் அதிகரிக்கும் நிலை ஏற்படலாம் என்பதால் பாதுகாப்பு கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற உறுப்பினர்களின் கோரிக்கையை பரிசீலித்த தவிசாளர், இது தொடர்பில் அடுத்த வருடம் ஆராயலாம் என்றும், ஒப்பந்தத்துக்கு மாறாக அதிகரித்த கட்டணம் அறவிடப்படுமானால் சந்தைக் குத்தகையை இரத்துச்செய்ய வேண்டிய நிலை வரும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வாகனப் பாதுகாப்பு தரிப்பிடத்துக்கு உரிய கொட்டகைகள் எதுவும் இன்றி, குறித்த சந்தையில் வீதியின் இரு மருங்கிலும் விடப்படும் வாகனங்களுக்கே கட்டணம் அறவிடப்படுகிறது என்ற குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு துறைமுக நகரம்

# முகாமைத்துவம் தவறின் இலங்கைக்கு ஆபத்தே

### சம்பிக்க எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.24



**கொழும்பு துறைமுக நகரத்தை முறையாக முகாமைத்துவம் செய்யாவிட்டால், இலங்கை எதிர்காலத்தில் பூகோள மட்டத்தில் அதிகாரமிக்க நாடுகளின் பொருளாதார மற்றும் அரசியல் போட்டித்தன்மைக்கு முகம்கொடுக்க நேரிடும். இதனால் பெரும் விளைவுகளையும் எதிர்நோக்க நேரிடும்.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள 43 ஆவது படையணிக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார நிலைமை ஆகியற்றை அடிப்படையாகக் கொண்டே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நேரடி முதலீடுகளை மேற்கொள்வர். இந்த நிலைமை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுக நகர விவகாரம் தற்போது பொருளாதார முன்னேற்றத்துக்கு அப்பாற்பட்டு பூகோள அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இவ்வாறான பின்னிணியில் கொழும்பு துறைமுக பொருளாதார ஆணைக் குழு சட்டவரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க 2002 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய 'மீள் எழும் இலங்கை' என்ற எண்ணக்கருவில், கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டமிடல்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டு முறையான சட்ட வழிமுறைகளுக்கு அமைய கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

கொழும்பு துறைமுக நகரம் இலங்கைக்கு முழுமையாகச் சொந்தம் என்ற வர்த்தமானி 2019 ஆண்டு ஓகஸ்ட் மாதம் வெளியிடப்பட்டது.

தற்போது கொழும்பு துறைமுக நகரத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு சீன நிறுவனம் முழுமையாக முதலீடு செய்துள்ளது என்று ஆளும் தரப்பினர் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

சீனாவுக்கு இணையாக இலங்கையும் மின்சாரம், திண்மக்கழி வகற்றல், குடிதண்ணீர் வசதி மற்றும் போக்குவரத்து ஆகிய அடிப்படை தேவைகளுக்காக ஒரு பில்லியன் டொலர் நிதியை முதலீடு செய்துள்ளது. 1.4 பில்லியன் டொலர் மாத்திரமே சீன நிறுவனத்தால் இதுவரையில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகரம் முழுமையாக இலங்கைக்குச் சொந்தம் என்று செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக பொருளாதார வலய சட்டவரைவில் நீக்கப்பட்டுள்ளது. தனி ஒரு பிராந்தியத்தைத் தோற்றுவிக்கும் அம்சங்கள் மாத்திரம் வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நாட்டு மக்கள் தெளிவுபெற வேண்டும். நாட்டின் இறையாண்மையை ஒரு போதும் விட்டுக்கொடுக்க முடியாது- என்றார். (ப-4)




## மரக் கன்றுகள் நடுகை

யாழ்ப்பாணம்,ஏப்.24

உலக பூமி தினத்தை முன்னிட்டு எழுதுளிர் அமைப்பால் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் செட்டித்தெரு மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் மரக்கன்றுகள் நடுகை செய்யப்படடன. (ஜ-20)


## 71 வயதுக்கு மேற்பட்ட 294 பேர் உயிரிழப்பு

நாட்டில் கொரோனாத் தொற்றால் பதிவான உயிரிழப்புக்களில், 71 வயதுக்கு மேற்பட்டோர் 294 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். அத்துடன் 61 வயது தொடக்கம் 70 வயதுக்கு இடைப்பட்ட 158 பேரும், 51 வயது தொடக்கம் 60 வயதுக்கு இடைப்பட்ட 86 பேரும், 41 வயது தொடக்கம் 50 வயதுக்கு இடைப்பட்ட 49 பேரும், 31 வயது தொடக்கம் 40 வயதுக்கு இடைப்பட்ட 15 பேரும், 10 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட் 9 பேரும், 9 வயதுக்கு உட்பட் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். அதேவேளை முதலாம் அலையில் 13 இறப்புக்களும், இரண்டாம் அலையில் 612 இறப்புக்களும் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-4)

## மரண அறிவித்தல்

# இரத்தினசாமி குருக்கள் உருத்திரதாஸக்குருக்கள்

(நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்னாள் அர்ச்சகர்)



தோற்றம் 27.11.1940

மறைவு 14.04.2021

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசாமிக்குருக்கள் உருத்திரதாஸக்குருக்கள் 14.04.2021 புதன்கிழமை அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசாமிக்குருக்கள் கமலாம்பிக்கை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமிக்குருக்கள் - மீனாட்சி அம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், ஜெயதீஸ்வரி அம்மாவின் அன்புக்கணவரும், ருத்திர தேவானந்த குருக்கள் (குகன் - மலேசியா) அபிராமி அம்மா, சந்தான லட்சுமி ஆகியோரின் பாசமிகு தந்தையும், யசோதைரஞ்சனி, சோமஸ் கந்தசர்மா (நல்லூர் கந்தசுவாமி ஆலய - அர்ச்சகர்) குருபர சர்மா (நயினை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவகாம சௌந்தரி, சண்முகநாதசர்மா (நல்லூர் மனோன்மணி அம்மன் கோவில் தர்ம கர்த்தா) மற்றும் சாரதாம்பாள், சுசீலா தேவி, காலஞ்சென்ற மனோன்மணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான வீரமணி ஐயர் (இணுவில்) சிவசுப்ரமணியக்குருக்கள் (அராலி) மற்றும் பாலசுப்ரமணியம் சர்மா ஆகியோரின் அருமை மைத்துனரும், கிருஸ்ணநாதக்குருக்கள் கிரிசாம்பாள் (கொழும்பு), ஜெயபாலினி (காயத்ரி) ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும், ஆகாஷ்நாத் சர்மா, கணஸ்ரீநாத் சர்மா, ஸ்ரீசந்தோஷ் சர்மா, பிரஜாபன் சர்மா, தன்ஷிகா, ஸ்ரீராமசர்மா, ஸ்ரீலக்ஸ்மண சர்மா, கிரிவாசசர்மா, கிரிசுதசர்மா ஆகி யோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2021) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படிகேட்டுக் கொள்கிறோம்.

**171/3 மனோன்மணி அம்மன் கோவில், நல்லூர்,**
**077 610 1105, 021 205 4060**

**தகவல்**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற அனுமதி கிடைத்ததும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு

## மன்னார் மாவட்ட கடற்றொழில் அலுவலர் தெரிவிப்பு

**மன்னார், ஏப். 24**

**நாடாளுமன்ற அனுமதி கிடைத்தவுடன் புரேவிப் புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று மன்னார் மாவட்ட கடற்றொழில் அலுவலர் என்.பவநிதி தெரிவித்துள்ளார்.**

கடந்த வருட இறுதியில் இலங்கையின் வடபகுதி கடற்கரைப் பிரதேசங்களை தாக்கிய புரேவிப் புயல் காரணமாக மீனவர்களின் படகுகள் மற்றும் வலைகள் கடலில் இழுத்துச் செல்லப்பட்டு மிகப் பெரும் சேதத்துக்கு உள்ளாகின. ஆனால் இன்றுவரை அரசால் எந்த ஒரு நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட மீனவர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இதுதொடர்பாக கருத்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

மன்னார் மாவட்டத்தில் புரேவிப் புயல் தாக்கத்தின் காரணமாக மீனவர்களின் வலைகள், இயந்திரங்கள் மற்றும் வாடி வீடுகள் ஆகியவற்றின் சேதங்களால் 266 மில்லியன் ரூபா இழப்புகள் ஏற்பட்டன என்று அதிகாரிகளால் மதிப்பீடு செய்யப்பட்டு இவை நாடாளுமன்ற அனுமதிக்காக கடந்த மார்ச் மாதமளவில் அனுப்பப்பட்டுள்ளது. அவற்றுக்கான பதிலும், அனுமதியும் எமக்கு இன்னும் கிடைக்கப்பெறவில்லை. அனுமதி கிடைத்தவுடன் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம். இந்த இழப்பீடுகள் முழுவதுமாக இல்லாவிட்டாலும், பாதிப்புகளை முன்னிலைப்படுத்தி நிவாரணம் வழங்கக்கூடியதாக இருக்கும் - என்றார். (ஜ-213)



## பிரியாவிடை நிகழ்வு

முல்லைத்தீவு, ஏப்.24

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு சிராட்டிகுளம் கிராமத்தில் அமைந்துள்ள மாந்தை கிழக்கு பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலைய தையல் போதனாசிரியருக்கான பிரியாவிடை நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி சிராட்டிகுளம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் ந.ரஞ்சனா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-13,9)

## மருத்துவர்கள் தாமதிப்பதால் கிளினிக் நோயாளிகள் சிரமம்

வவுனியா,ஏப்.24

வவுனியா பொது மருத்துவமனைக்கு, உரிய நேரத்தில் சில மருத்துவர்கள் கடமைக்கு வருகை தராத காரணத்தால், மாதாந்த சிகிச்சைக்காகச் செல்லும் கிளினிக் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர்.

மருத்துவர்கள் தாமதமாக வருகை தருவதால், நேரத்துடன் மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளிகள், உணவருந்துவதற்கோ அல்லது வேறு தேவைகளுக்கோ வெளியில் செல்லமுடியாமல் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே நோயாளர்களாக உள்ள தாம், இவ்வாறான செயற்பாடுகளால் மென்மேலும் அசௌகரியங்களையே சந்திக்க வேண்டியுள்ளது. இந்த நிலமையைச் சீர்செய்தற்கு அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று நோயாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-4)

## வீதி விபத்தில் மூதாட்டி காயம்

சாவகச்சேரி, ஏப். 24

பாதசாரிகள் கடவையைக் கடக்க முற்பட்ட மூதாட்டியை, மோட்டார் சைக்கிளில் வந்த பெண்ணொருவர் மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளார். இதன்போது காயமடைந்த மூதாட்டி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து கடந்த புதன்கிழமை தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெற்றது. விபத்தில் 72 வயது மூதாட்டியே காயமடைந்துள்ளார். (ஜ-9)

## வர்ணப் பூச்சுக்கென நிதி சேகரிப்பு; கிளி. கல்வி வலயத்தால் விசாரணை

கிளிநொச்சி, ஏப்.24

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரபல பாடசாலை ஒன்றில் வர்ணப் பூச்சுக்கென மாணவர்களிடம் இருந்து பணம் சேகரிப்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தெரித்தார்.

குறித்த பாடசாலையில் இருந்து வர்ணம் பூசுவ தற்கென மாணவர்களிடம் இருந்து பணம் பெறப்படுகின்றது. கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் அனுமதி இல்லாமலே மாணவர்களிடம் இருந்து பணம் பெறப்படுகின்றது. 640 ரூபா வரையான நிதியையே மாணவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற சுற்றறிக்கைகள் உள்ள நிலையில் பாடசாலையின் நிர்வாகம் மாணவர்களிடம் இருந்து 500 ரூபா முதல் ஆயிரம் ரூபா வரையான நிதியை பெற்றுக்கொள்கின்றது. பணம் பெற்றுக்கொள்வதற்கான பற்றுச்சீட்டுகள் கூட வழங்கப்படுவதில்லை. பாடசாலையின் வகுப்பாசிரியர்களாலேயே குறித்த பணம் சேகரிக்கப்படுகின்றது. பாடசாலையில் 2 ஆயிரத்து 500 மாணவர்கள் கல்வி கற்கின்ற போதும். அவர்களில் அநேகமானார் போரால் பாதிக்கப்பட்ட வறுமை நிலையில் வாழ்கின்ற கூடுதலான மாணவர்களாகவே காணப்படுகின்றனர். எனவே இது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று பெற்றோர் சிலர் கோரினர்.

இது தொடர்பில் வலயக்கல்விப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

"வர்ணப் பூச்சுக்கென பணம் சேகரிக்கப்பட்டமை தொடர்பாக வலயக் கல்விப் பணிமனையின் அனுமதி பாடசாலையால் பெறப்படவில்லை, அது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படும்" என்றார். (ஜ-13)



## மறைந்த சிவஞானசோதிக்கு வலி.மேற்கு சபையில் அஞ்சலி

மீள்குடியேற்ற மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலர் மறைந்த வி.சிவஞானசோதிக்கு வலி.மேற்கு பிரதேச சபை அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டது.நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தவிசாளர் தலைமையில் சபை அமர்வு நடைபெற்றது.

இதன்போது மறைந்த செயலர் சிவஞானசோதியால் வலி. மேற்கு பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் சம்பந்தமாக நினைவுகூரப்பட்டது. அத்துடன் உறுப்பினர்களின் அஞ்சலி உரையும் இடம்பெற்றது. (ஜ-319)

## மன்னார் மாவட்ட கீதத்துக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

மன்னார்,ஏப்.24

மன்னார் மாவட்டத்துக்கான கீதம் வடிவமைப்பதற்கு, மாவட்டத்தைச் சேர்ந்த கலைஞர்கள் மற்றும் கலை ஆர்வமுடையவர்களிடம் இருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மன்னார் மாவட்டம் மற்றும் அதன் பல்வேறு சிறப்பம்சங்களை எடுத்துக்கூறும் வகையில் 'மாவட்ட கீதம்' வடிவமைப்பதற்கு ஆர்வமுடையவர்களிடம் இருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

விசேடமாக மாவட்டத்துக்கே உரியதான வரலாற்றுத் தடயங்கள் மற்றும் அதன் சிறப்பம்சங்களை எடுத்து இயம்பும் வகையிலும் மூன்று தொடக்கம் நான்கு நிமிடங்களுக்குள் இசைக்கக்கூடியதாகவும் மேற்படி கீதம் அமைதல் வேண்டும்.எழுத்துப் பிரதியாகவோ அன்றி இசையமைத்து இறுவட்டு வடிவிலோ கீதத்தை சமர்ப்பிக்க முடியும்.

ஆக்கங்கள் அனைத்தும் எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் மாவட்டச் செயலாளர்,மாவட்டச் செயலகம்,மன்னார் என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடிய வகையில் நேரடியாக அல்லது தபால் மூலம் சமர்ப்பிக்க முடியும் - என்றார். (ஜ-56)

## நடமாடும் சேவை

வலி.மேற்கு பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த மக்களுக்கான அடையாள அட்டை , காலம் கடந்த பிறப்பு , இறப்பு மற்றும் விவாகம் பதிவு செய்தல் தொடர்பான நடமாடும் சேவை, எதிர்வரும் 28 ஆம் திகதி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது. குறித்த நடமாடும் சேவையில் பயன்பெற விரும்பும் பயனாளிகள் உரிய ஆவணங்களுடன் அன்றைய தினம் வருகைதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-121)

## நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடல்

கிளிநொச்சி, ஏப்.24

பூநகரி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த வர்த்தகர்கள் பயன்படுத்தும் நிறுவைகள் மற்றும் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடப்படவுள்ளன.

மாவட்டச் செயலகத்தின் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவால் எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் முழங்காவில் பிரதேசத்திலும், மே மாதம் 4 ஆம் திகதி ஜெயபுரம் வடக்கு கிராம அலுவலர் பிரிவிலும், மே மாதம் 5 ஆம் ,6 ஆம் திகதிகளில் பூநகரி பிரதேச செயலகத்திலும் முத்திரை யிடப்படவுள்ளன.

முத்திரை பதிக்காது நிறுக்கும், அளக்கும் உபகரணங்களை வர்த்தகத்துக்கு பாவிப்பது மாத்திரமல்ல, வைத்திருப்பதும் தண்டணைக்குரிய குற்றமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


எனவே அனைத்து வர்த்தகர்களும் இதனைக் கருத்தில்கொண்டு இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களுடைய தராசுகள் மற்றும் அளவுகோல்களுக்கு முத்திரையிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு லட்சம் வீதிகள் சீரமைப்பு திட்டம்; சாவ. நகரில் 13 வீதிகளுக்கு முன்னுரிமை

சாவகச்சேரி ஏப். 24

அரசின் ஒரு லட்சம் மீற்றர் கிராமிய வீதிகள் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 15 கிலோ மீற்றர் நீளமுடைய 13 வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் தார்க்கலவை வீதிகளாகச் சீரமைக்கப்படவுள் ளன. நகர சபை அமர்வில் உறுப்பினர்க ளால் முன்மொழியப்பட்ட 50 வீதிகளின் விவரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் குறித்த 50 வீதிகளையும் பார்வையிட்ட பின்னர், அவற்றில் அவசியம் எனக் கருதப்பட்ட 13 வீதிகளைச் சீர மைக்க பரிந்துரை செய்துள்ளனர். சங்கத் தானை சப்பச்சிமாவடி வீதி, மண்டுவில் அம்மன் கோவில் வீதி, மீசாலை பங்களா வீதி, சங்கத் தானை பெரிய அரசடி வீதி, சித்தன்மாவடிப் பிள் ளையார் கோவில் வீதி , மீசாலை கார்த்திகேசு வீதி , நுணாவில் கிழக்கு ஆடியம்பிட்டி வீதி, சாவ கச்சேரி நகர் சண்முகம் வீதி, மீசாலை கிழக்கு பத்தினியார் துரவு ஒழுங்கை, சாவகச்சேரி தெற்கு எல்லை வீதி மற்றும் பெருங்குளம் - சங்கத்தானை வீதி ஆகிய வீதிகளையே சீரமைக்க பரிந்துரைக் கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ப-9)



கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் மேற்கொண்டு வரும் சேவைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் அலு வலர்கள் பயன்படுத்துவதற்கென சாவகச்சேரி எவர்கிறீன் தனியார் மருத்துவமனை நிர்வாகத்தால் நேற்று 1000 முக கவசங்களை சுகாதார மருத்துவ அதிகாரியிடம் கையளித்தனர். (ப-9)


## REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA
## INVITATION FOR BIDS (IFB)
### Procurement of Office Equipment & Electronic Items

A. The Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, goods as specified following Tables.
   01) Office Equipment
   02) Electronic Items
   Bidding will be conducted through National Competitive Bidding Procedure

B. To be eligible for contract award the successful bidder shall not have been blacklist and shall need the following requirements
   01) Bidders shall have valid business registration
   02) and business registration for supply of respective Supplies and Service
   03) Regional preference and CIDA grade preference will be apply as stipulated in Public Finance circular No 4/2016(11)

C. Interested eligible bidders may obtain further information from the Regional Director of Health Services, Jaffna Conduct No (021 2222278/4557 ext 20), during the office hours and inspect the Bidding Documents at the same address any working days for 9.00am to 3.00pm except 12.30 to 13.30 hours

D. A complete set of English Bid documents may be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of a non refundable fee as specified in the table by cash on working days from 27.04.2021 to 11.05.2021 during 09.00 Hours to 15.00 Hours.

E. Bids shall be delivered to Chairmen, Regional Procurement Committee , Regional Directorate of Health Services, No.572/3, Hospital Road ,Jaffna on or before 10.00 Hours of 12.05.2021. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of bidder's representatives who choose to attend.

F. Bid shall be valid for a remind 90 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 118days from the bid opening.

G. Pre-bid Conference will be held at Conference Hall, Office of the Regional Director of Health Services, Jaffna commencing at 10.00am on 05.05.2021.
   **01) Table I – 10.00am**
   **02) Table 11 -10.30 a.m**

I. Procurement committee will be the right to make final decision in regard the accept

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/RDHS/PSDG/OE/2021/01 | Office Table | 20 | 1,000.00 | 30,000.00 |
| | Computer Table | 05 | | |
| | Executive Table | 05 | | |
| | Plastic Table | 05 | | |
| | Office Chair (Revolving) | 60 | | |
| | Executive Chair | 04 | | |
| | Visitors Chair | 04 | | |
| | Filling Cabinet | 10 | | |
| | Drawer Steel Four | 04 | | |
| | Revolving Adjustable Stool | 02 | | |
| | Almerah Steel | 12 | | |
| | Dispenser Table | 01 | | |
| NP/RDHS/CBG/OE/2021/03 | Front Glass Almerah | 09 | 1000.00 | 16,000.00 |
| | Conference Table (Capacity 20 Persons) | 01 | | |
| | Conference Table (Capacity 09 Persons) | 01 | | |
| | Reception Table (Office Table Large) | 05 | | |
| | Conference Chair | 70 | | |
| | Plastic Chair with Arm | 250 | | |
| | Plastic Chair Without Arm | 20 | | |

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/RDHS/PSDG/OE/2021/02 | Bed | 03 | 1,000.00 | 11,000.00 |
| | Bed side Locker | 05 | | |
| | Benches with Backrest | 10 | | |
| | Wooden Bed | 02 | | |
| | Mattress | 23 | | |
| | Glass Pad | 03 | | |
| | Almerah Wooden | 02 | | |
| | Stool | 05 | | |
| | Stool ( Small) | 04 | | |
| | Stool Wooden | 05 | | |
| NP/RDHS/PSDG/OE/2020/04 | Waste Bin With Colour Coading | 01 | 1,000.00 | 1,000.00 |
| | Waste Collection and Transport Trolley (3 Big Bucket) | 02 | | |
| | Plastic Bucket | 03 | | |
| | Plastic Bucket 25 Lit | 05 | | |
| | Plastic Bucket 30 Lit | 05 | | |
| | Plastic Bucket 50 Lit | 05 | | |
| | Plastic Bucket 09 Lit | 05 | | |
| | Plastic Bucket 05 Lit | 10 | | |

Table -11

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/RDHS/PSSP/PSDG/EI/2020/01 | Laptop Computer | 23 | 1,000.00 | 65,000.00 |
| | Desktop Computer | 07 | | |
| | Photocopy Machine | 02 | | |
| | Printer | 02 | | |
| | Scanner | 02 | | |
| | Dot Matrix Printer | 01 | | |
| | Lamination Machine | 02 | | |
| NP/RDHS/PSSP/PSDG/EI/2020/02 | Air Conditioner 9000BTU | 02 | 1,000.00 | 7,000.00 |
| | Television | 02 | | |
| | Pedestal Fan | 05 | | |
| | Celling Fan | 14 | | |

Chairperson,
Regional Procurement Committee,
RDHS Office,
Jaffna.



## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க
## லொறிகள் பகிரங்க ஏல விற்பனை

| வாகனம் | லொறியின் வகை | இலக்கம் |
|---|---|---|
| லொறி | இசு சு – ஜயப்பான் | 24-2252 |
| லொறி | அசோக் லேடன் -இந்தியன் | 24-9746 |
| லொறி | BMC | 24-8122 |

மேற்படி லொறிகள் எதிர்வரும் 08.05.2021 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு சங்க தலைமை காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளதால் லொறியினை பார்வையிட விரும்புவர்கள் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா 1000/= யும், மீளளிக்கக் கூடிய வைப்பாக ரூபா 5000/= யும் சங்கத்தில் செலுத்தி லொறிகளை பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

**பார்வையிடும் இறுதித் தினம் 07.05.2021 ம் திகதி பி.ப. 02 மணிக்கு முன்னர் சமுகமளிக்க வேண்டும்.**

மேலதிக விபரங்கள் தேவைப்படின் சங்க தலைமைக் காரியாலயத்தில் காரியாலய நேரம் காலை 09.00மணி தொடக்கம் மாலை 04.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்.
தொ.இல:- 021 224 3627



## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 30.08.1968

மறைவு : 03.05.2012

## அமரர் கைலைலிங்கம் முருகதாஸ்
(முன்னாள் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்)

திதி : 24.04.2021

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

4/4, இராமகிருஸ்ணா பாடசாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற இணக்கப்பாட்டையும் மீறி அமைகிறது சட்டவிரோதக் கட்டடம்

*மக்கள் விசனம்*

வலி.தென்மேற்கு, ஏப். 24
நீதிமன்றத்தில் எட்டப்பட்ட இணக்கப் பாட்டை அடுத்து நிறுத்தி வைக்கப்பட்டி ருந்த சட்ட விரோதக் கட்டடம் அமைக்கும் பணி, பல மாதங்களுக்கு பின்னர் மீண்டும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பிரதான வீதியில் மக்கள் அதிகமாக நடமாடும் பிரபல்யமான சந்தியில் நீதிவானுடன் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டை மீறி அமைக்கப்பட்டு வரும் சட்டவிரோதக் கட்டடம் சம்பந்தமாக அந்த வட்டாரத்தை பிரதிநிதித்து வப்படுத்தும் உறுப்பினரும் தவிசாளரும் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் தெரிந்தும் தெரியாதது போல் இருப்பது தொடர்பில் மக்கள் விசனம் தெரிவித்தனர்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் பண்டத்தரிப்பு பட்டினத்தின் மையப்பகுதியில் பிரதான சந்தியில் பிரதேச சபையின் அனுமதியின்றி சட்டவிரோதமான முறையில் கட்டப்பட்டு வந்த கட்டடத்துக்கு எதிராக கட்டட உரிமையாளர் மீது 2005 ஆம் ஆண்டு பிரதேசசபை செயலாளரால் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிவான் 2006ஆம் ஆண்டு ஓர் இணக்கப் பாட்டை ஏற்படுத்தியிருந்தார்.

"தற்போது இருக்கும் கட்டடத்தை ஒளிப் படம் எடுத்து அதில் உள்ள கட்டடத்தை தவிர புதிதாக மேலதிகமாக எந்த ஒரு கட்டுமானங்களும் மேற்கொள்ளப்படக் கூடாது. ஒளிப்படத்தை மன்றுக்கு சமர்ப் பிக்க வேண்டும்.

வீதி அகலிக்கும்போது இழப்பீடு எதுவும் கோராமல் கட்டடத்தை அகற்றி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அத்துடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் எதிர் மனுதாரர்கள் ஓர் ஒப்பந்தத்தை செய்ய வேண்டும்" என்று அந்த இணக்கப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்தக் கட்டடம் மீண்டும் அமைக்கப்பட்டு வருகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-115)

---

## பதினெட்டாம் ஆண்டில் இதயம் சுமக்கும் நினைவுகள்

அன்னை மடியில்
20 . 05 . 1927



ஆண்டவன் அடியில்
24 . 04 . 2003

### அமரர் தொம்மை பிலிப்பு (அண்ணாவியார்)

அன்புடன் பண்பு சேர்த்து எமை வளர்த்து
அகிலமதில் நாம் எளிமையாய்
வாழ்வதன் பொருளுணர்த்தி
உங்கள் முன்மாதிரிகையால் எமை வாழ்வித்து
எம்மை நன்னெறியில் வளர்த்தெடுத்த
எம் அன்பு நிறை தந்தையை
நன்றியுணர்வுடன் நினைக்கின்றோம்
இந் நாளில்
நின் ஆன்மா விண்ணக பேரின்பத்தில்
மகிழ்ந்திருக்க இறையருள் வேண்டுகின்றோம்.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

---



பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட பளை மத்திய கல்லூரியில் நேற்று சிவன் ஆலயம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டு அதற்கான குடமுழுக்கு இடம்பெற்றது. (ஐ-113,222)

---


## மத்தியஸ்த சபை அமர்வு ஆரம்பம்

சாவகச்சேரி,ஏப்.24
யாழ்ப்பாண பிரதேச மத்தியஸ்த சபை அமர்வுகள் வழமைபோல் யாழ். சன்மார்க்கம் மகா வித்தியாலயத்தில் (பெருமாள் கோவிலடி) ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை நடைபெறும் என்று சபைத் தவிசாளர் எம்.கௌரி அறிவித்துள்ளார். (ஐ)

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 17.05.2000
மறைவு 12.03.2021



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் ஊரெழுவை வாசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் நவரஞ்சன் கௌதமன்

(யா/ வயாவிளான் மத்திய கல்லூரி பழைய மாணவன், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவன்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (23.04.2021) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

குடும்பத்தினர்
076 750 4765, 077 528 8751
ஊரெழு வடக்கு, சுன்னாகம்.

---



மன்னார் பட்டித்தோட்டத்தில் அமைந்துள்ள சாந்தோம் வயோதிபர் இல்லத்துக்கு மன்னார் கார்கில்ஸ் பூட்சிட்டியால் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சலவை இயந்திரங்கள் இரண்டு நேற்று அன்பளிப்பு செய்யப்பட்டன. (ஐ-56)

---

## மணிவிழா வாழ்த்து

யா/ மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தில்



மணிவிழாக்காணும் எங்கள் ஆசிரியர்

### திரு.அருணாசலம் ரங்கன்

விஞ்ஞான பாட ஆசிரியர்- SLTS -I
(குரு பிரதீபா நல்லாசிரியர் - 2019)

எமது பாடசாலையில் 17.01.2014 தொடக்கம் 7 வருடங்கள் தன் பணியில் நல்லாசிரியராக பணியாற்றி நேற்று (23.04.2021) அன்று சேவையிலிருந்து ஓய்வுபெற்று இன்று (24.04.2021) மணிவிழாக்காணும் ஆசிரியரின் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டுவதுடன் ஓய்வுகாலம் மேலும் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள்
யா/ மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் நம்பிக்கையின் சாட்சிகள்

*வத்திக்கான் பல்சமய உரையாடலில் திருப்பீட அவை*

கொரோனாப் பெருந்தொற்று காலக்கட்டத்தில் கிறிஸ்த வர்களும் முஸ்லிம்களும் உலகில் நம்பிக்கையின் சாட்சிகளாக வாழுமாறு வத்திக்கான் பல்சமய உரையாடல் திருப்பீட அவை ரமழான் நோன்பு மாதம் மற்றும் விழாவுக்கென்று வெளியிட்ட செய்தியில் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பெருந்தொற்று போன்ற சூழல்களில் நாம் கடவுளின் இரக்கம் மன்னிப்பு, பராமரிப்பு போன்றவற்றோடு ஆன்மிக மற்றும் பொருளாதாரக் கொடைகளையும் அவரிடம் இறைஞ்சுகிறோம், ஆயினும் இந்தக் காலக்கட்டத்தில் நமக்கு நம்பிக்கை அதிகம் தேவைப்படுகின்றது.

நாம் புரிந்துகொள்ள முடியாத வழிகளில் கடவுள் நம்மைப் பராமரித்து காத்துவருகிறார். நம் பிரச்சனைகளுக்கும் சோதனைகளுக்கும் ஓர் அர்த்தம் உள்ளது என்பதை ஏற்பதிலிருந்து பிறப்பது நம்பிக்கை. என்றும் இது எல்லா மனிதரிலும் நன்மைத்தனம் பிரசன்னமாக இருக்கின்றது.

எனவே, கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களுமாகிய நாம், நம்பிக்கையின் பாதைகளில் தொடர்ந்து முன்னேறுவோம், நம்பிக்கையின் சான்றுகளாக அதனைக் கட்டியெழுப்புவர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணர்வோம் என்றுள்ளது.



# இலங்கைக் கத்தோலிக்க தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குநராக ராஜேந்திரம் அடிகளார்

கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்
ஊடக வருகை விரிவுரையாளர்
இங்கை திறந்த பல்கலைக்கழகம்

இலங்கைக் கத்தோலிக்க தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குநராகக் காலி மறைமாவட்டத்தைச் சேர்ந்த மைக்கல் ராஜேந்திரம் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 6 ஆண்டுகளாக மேற்படி இலங்கைக் கத்தோலிக்க தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குநர் பொறுப்பை ஆற்றிய கண்டி மறைமாவட்டத்தைச் சேர்ந்த றோய் கிளரன்ஸ் அடிகளாரிடம் இருந்து மேற்படி இலங்கைக் கத்தோலிக்க தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குநர் பொறுப்பை இவர் பெற்றுக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலி மறைமாவட்டத்தைச் சோந்த மைக்கல் ராஜேந்திரம் அடிகளார் தாரகை என்ற பெயரில் காலி மறைமாவட் டத்துக்கான தமிழ்க் கத்தோலிக்க பத்திரிகை ஒன்றைப் பல சிரமங்கள் மத்தியில் நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கத்தோலிக்க செய்தி இதழ்

# தமிழ் பேசும் மறைமாவட்டங்களை ஓர் அலகாக இணைத்து பேரவை

தமிழ் மக்களின் நன்மை கருதி தமிழ்பேசும் மறை மாவட்டங்களை ஓர் அலகாக இணைத்து இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைபோல் இன்னுமொரு பேரவை அலகை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் மிக நீண்ட காலமாகவே உணரப்பட்டே வந்திருக்கிறது. ஆனால் அது இன்னும் நடைமுறைப்படுத்தப் படவில்லை.

1979ஆம் ஆண்டு ஏறக்குறைய அப்போதைய யாழ் ஆயராகிய மறைந்த கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை தூர நோக்குடனும் செயற்பாட்டுத்திறனுடனும் சமர்ப்பித்த இந்த வேண்டுகோளுக்கு "இது பொருத்தமான காலம் அல்ல" என்று அப்போது தெரிவிக்கப்பட்டது. 1993ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மகாநாட்டிலும் இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டு வலியுறுத்தப்பட்டது. 1995ஆம் ஆண்டு இடம்பெற்ற இடம்பெயர்வின் பின்னர் இவ் எண்ணத்திற்கு உரிய செயல் வடிவம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகவில்லை. விரைவில் இது ஒரு தனி அலகாக அமைக்கப்படும் சாத்தியங்கள் உண்டு.

# துறைசார் முதுவரான கெலும்சேனநாயக்கவை பிரதம நிறைவேற்றதிகாரியாக நியமித்துள்ள ஆர்பிகோ இன்சூரன்ஸ் - MDRT

## சாதனை புரிந்த இலங்கை காப்புறுதித்துறையின் முதலாவது பிரதம நிறைவேற்றுஅதிகாரி



துறைசார் முதுவரான கெலும்சேனநாயக்கவை பிரதம நிறைவேற்றதி காரியாக நியமித்துள்ள ஆர்பிகோ இன்சூரன்ஸ் MDRT சாதனை புரிந்த இலங்கை காப்புறுதித்துறையின் முதலாவது பிரதம நிறைவேற்றதிகாரி ஆவார்.

இலங்கையின் மிகவும் புத்தாக்கமானதும், மதிப்புவாய்ந்ததுமான காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான ஆர்பிகோ இன்சூரன்ஸ். பி.எல்.சி. ஆனது துறைசார் முதுவரான திரு.கெலும்சேனநாயக்கவை 2021 மார்ச் 1ஆம் திகதி தொடக்கம் தமது பிரதம நிறைவேற்றதிகாரியாக நியமித்துள்ளது. திரு.சேனநாயக்க அவர்கள் சுமார் 40 வருடங்கள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் உள்ள காப்புறுதி நிறுவனங்களின் அனுபவத்தை வெளிப்படுத்தியவர்.

சேனநாயக்க அவர்கள் தனது தொழில் வாழ்க்கையை 1982 ஆம் ஆண்டு தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனம் தனியார்மயப்படுத்தப்பட்டதும், அதற்கான முகவர்நிலையமாக விளங்கிய மேர்கன்டைல்கிரெடிட் நிறுவனத்தில் ஆரம்பித்தார். இதன் பின்னர் அவர் யூனியன் அசூரன்ஸ் நிறுவனத்தில் இணைந்ததுடன் உதவி பொதுமுகாமையாளராக பதவி உயர்வு பெற்று 2009 ஆம் ஆண்டு வரை சேவையாற்றியதுடன் அதன் பின்னன் அவர் ஈகிள் இன்சூரன்ஸில் (தற்போதைய AIA காப்புறுதி நிறுவனம்) ஆயுள் செயற்பாடுகளுக்கான பொதுமுகாமையாளராக இணைந்துகொண்டார். 2013 ஆம் ஆண்டில் அவர் ஆயுள் செயற்பாடுகளுக்கான பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றதுடன் இங்கு அவர் செயற்பாடுகள், ஆயுள்காப்பீடு, ஆயுள்சேவை, உரிமை கோரல்கள், உற்பத்தி அபிவிருத்தி, மறுகாப்பீடு, கிளை செயற்பாடுகள், கூட்டாண்மை தீர்வுகள் விநியோகம், தொடர்புநிலையங்கள் போன்ற விரிவான செயற்பாடுகளுக்கு பொறுப்பாக நியமி க்கப்பட்டார்.

கொழும்பு ஆனந்தா கல்லூரியில் கல்வி பயின்ற சேனநாயக்க வேர்ல்ட் வியூ கல்வியகத்தில் வர்த்தக முகாமைத்துவத்தில் டிப்ளோமாவை பெற்றுள்ளதுடன் அவுஸ்திரேலியா, வெஸ்டர்ன்சிட்னி பல்கலைக்கழகத்தில் வர்த்தக நிர்வாகத்தில் முதுமாணிபட்டத்தைப் பெற்றார். அவர் இலங்கை காப்புறுதித்துறையில் 133 நாள்களில் மில்லியன் டாலர் வட்டமேசை (MDRT) அந்தஸ்தைப் பெற்ற முதல் மற்றும் ஒரே பிரதம நிறைவேற்றதிகாரி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

இப்புதிய பதவி தொடர்பாக ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனியின் குழும; தலைவரான [illegible] தெரிவிக்கையில், "திரு.சேனநாயக்க அவர்கள் ஆர்பிகோ இன்சூரன்ஸில் பிரதம நிறைவேற்ற திகாரியாக நியமிக்கப்பட்டதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். பல தசாப்தங்களுக்கு மேற்பட்ட புகழ் பெற்ற தொழில் வாழ்க்கையுடன் துறையில் நெறிமுறைகள், சிறப்பு மற்றும் புத்தாக்கத்தில் அவதனையை பதிவுசெய்துள்ளதுடன் இந்நிறுவனத்தை அடுத்தகட்டத்துக்கு கொண்டு செல்வார் என்பதிலும் அதேவேளை நம்பகத் தன்மை மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றில் அர்ப்பணிப்புடன் ஈடுபடுவார் என்பதிலும் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்."

முகாமைத்துவ தொழில் தகைமையாளரான சேனநாயக்க அவர்கள் கௌரவம் மிகுந்த பயிற்றுவிப்பாளராக திகழ்வதுடன் தனது தொழில்வாழ்க்கையில் 5000ற்கு மேற்பட்ட காப்புறுதி தொழில் தகைமையாளர்களுக்கு பயிற்சிகளை வழங்கியுள்ளதுடன் ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, ஜப்பான், சிங்கப்பூர், ஹோங்கோங், மலேசியா மற்றும் தென்ஆபிரிக்காவில் பயிற்சி பெற்றுள்ளார். அவர் தனது புதிய பதவி தொடர்பாக தெரிவிக்கையில்" ஆர்பிகோ குழுமத்தில் இணைந்ததை நான் கௌரவமாக கருதுவதுடன் இது முன்னணி இல்லசார் வளர்ச்சி வர்த்தகத்துக்கான சிறந்த அங்கீகாரமாகவும் [illegible] எனது கடந்தகால அனு[illegible] திறன்களுடன், குழுமத்தின் பங்கு மற்றும் உறுதித்தன்மை நிறுவனத்திற்கு நன்மை பயக்கும் வகையில், அதை ஒரு புதிய உன்னத நிலைக்கு கொண்டு செல்ல முடியும் என நான் நம்புகிறேன். வாடிக்கையாளர் மைய அணுகுமுறையைப் பின்பற்றுவதன் மூலமும், எமது மிக முக்கியமான சொத்தான வாடிக்கையாளர்களுக்கு வலுவூட்டுவதன் மூலமும் குறைகளை நிவர்த்திசெய்து, அனைத்து பங்குதாரர்களின் குறிக்கோள்களை எளிதாக்கவும் நான் திட்டமிட்டிருக்கிறேன்."

ஆர்பிகோ இன்சூரன்ஸ் பி.எல்.சி ஆனது 2011 ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டதுடன், இது இலங்கை காப்புறுதி ஒழுக்காற்று ஆணைக்குழுவின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டகாப்புறுதி நிறுவனமாகும். இந்த புகழ்பெற்ற காப்புறுதி வழங்குநர் தற்போது நன்கொடை, சுகாதார காப்புறுதி, தவணை காப்புறுதி, கல்வி, முதலீடு, பணி ஓய்வு, குழும காப்புறுதி மற்றும் கடன் பாதுகாப்பு போன்ற பரந்த சேவைகளை வழங்கி வருவதுடன் வாழ்க்கைக்கான காப்புறுதியை வழங்கும் ஒரேயொரு ஆயுள் காப்புறுதி நிறுவனமாகவும் திகழ்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுக்கள் ஊடாக சட்டவரைவு பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்

## அரசுக்கு ரணில் ஆலோசனை



கொழும்பு, ஏப். 24
எமது ஆட்சிக் காலத்தில் முன்வைக்கப்பட்டதை விட வேறுபட்ட சட்ட வரைவே இப்போது முன்வைக்கப்பட்டுள்ளது. இப்போதைய சட்ட வரைவு மோசமானது. இதனைப் பேச்சுக்கள் ஊடாகத் தீர்த்துக் கொள்ள முடியும். இவ்வாறு முன்னாள் பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவு தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

கொழும்புத் துறைமுக நகரில் நிதி மத்திய நிலையத்தை உருவாக்கும் யோசனை 2016ஆம் ஆண்டு எமது ஆட்சிக் காலத்தில் முன்வைக் கப்பட்டது. அதற்கு சட்டம் உருவாக்கப்பட்டது. துறைமுக நகரம் இலங்கைக்குச் சொந்தமானது. அங்கு நிதி நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப்படவேண்டும். அதற்காக நாங்கள் இதனைச் செய்தோம்.

ஆனால் இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டவரைவு பாரதூரமானது. நாடாளுமன்றத்தினதும், நீதிமன்றத்தினதும் அதிகாரங்களை கொழும்புத்துறைமுக நகருக்குள் செல்லுபடியற்றதாக்குகின்றது. நிதி அமைச்சின் அதிகாரங்கள் முழுவதும் பறிக்கப்படுகின்றன.

புதிய சட்டவரைவு தொடர்பில் அரசு உரிய முறையில் பேச்சு நடத்தி பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் - என்றார். (ஒ.இ)

# இஸ்லாமிய அடிப்படைவாதம் அழித்தொழிக்கப்படவில்லை!

## அத்துரலிய ரத்ன தேரர் காட்டம்



**கொழும்பு, ஏப். 24**

**இலங்கையில் முஸ்லிம் இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் பலராலும் மூளைச் சலவை செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இஸ்லாமிய அடிப்படைவாதம் புகுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிப்பதில் இந்த அரசும் தோல்வியடைந்துள்ளது. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகசந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஈஸ்டர் தாக்குதலுக்கு முன்னைய அரசு பொறுப்பு. இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்காமைக்கு இந்த அரசு பொறுப்பு.

முஸ்லிம்கள் பலர் அறிந்தும் அறியாமலும் மூளைச்சலவை செய்யப்பட்டுள்ளனர். ஹிஸ்புல்லாவின் மட்டக்களப்பு பல்கலைக்கழகம் கூட அதற்காகவே ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தும் இதுவரை விசாரிக்கப்படவில்லை.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் ஆளுநர்களாக இருந்த ஹிஸ்புல்லா மற்றும் அசாத் சாலி ஆகியோர் பதவி விலகவேண்டும் என்று தலதா மாளிகை முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தேன். இதன்போது அரசிலிருந்த சகல முஸ்லிம் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் எல்லோரும் தமது பதவிகளைத் துறந்தனர். அவர்களின் ஒற்றுமை குறித்து சிங்களவர்கள் சிந்திக்க வேண்டும். இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க சிங்களவர்கள் கட்சி பேதமின்றி கைகோர்க்கவேண்டும்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையில் மதராஸா பாடசாலைகளின் கல்வித் திட்டம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அது இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. முஸ்லிம்களுக்கான காதி நீதிமன்றம் முழுமையாகத் தடை செய்யப்பட வேண்டும் என்று தனிநபர் பிரேரணையை நாடாளுமன்றில் முன்வைத்தேன். இதுவரை அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

நல்லாட்சி அரசை இயக்கிய இஸ்லாமிய அடிப்படைவாதம் தற்போதைய அரசை இயக்குகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

மதரஸா பாடசாலை மற்றும் காதி நீதிமன்றம் ஆகியவை தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை அரசு இரண்டு வாரத்துக்குள் முழுமையாகச் செயற்படுத்த வேண்டும். இல்லாவிடின் மாற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ஒ.இ)

# நாட்டின் பாதுகாப்பு பெரும் அச்சத்தில்

## மரிக்கார் எம்.பி.சுட்டிக்காட்டு



கொழும்பு,ஏப்.24
அணுசக்திக்குப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள்கள் அடங்கிய கப்பல் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்தமை, நாட்டின் பாதுகாப்பு பெரும் ஆபத்தில் இருப்பதை எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

தேசிய பாதுகாப்பை ஸ்திரப்படுத்துவோம் எனக் கூறியே இந்த அரசு ஆட்சியைக் கைப்பற்றியது.

கடந்த புதன்கிழமை அணுசக்திக்குப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள்கள் அடங்கிய கப்பல் அனுமதியின்றி அம்பாந்தோட்டை துறைமுகம் வரை வந்துள்ளதை எவரும் அவதானிக்கவில்லையா?

குறித்த கப்பல் இலங்கை கடல் எல்லைக்குள் பிரவேசித்து, அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரும் வரை அதிகாரிகள் உறங்கிக் கொண்டிருந்தார்களா?

இதையே அறியாமல் இருப்பவர்கள், வெளிநாட்டு இராணுவம் நாட்டுக்கு வந்து சென்றாலும், தெரியாத நிலைமையிலேயே இருப்பர். அவ்வாறெனில் நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும் - என்றார். (ப-4)

# இலங்கையிலுள்ள முஸ்லிம் மக்கள் தீவிரவாதத்தை ஆதரித்தவர்கள் அல்லர்

## அப்துல்லா மஹ்ரூப் தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.24
தற்போதைய நீதி அமைச்சரின் கருத்தைப் பார்க்கின்றபோது சந்தோசமாக உள்ளது. ஏனெனில் இந்த நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம்களில் 99.9 வீத மானவர்கள் இந்த நாட்டுக்கு விசுவாசமுடையவர்களாக உள்ளார்கள். ஒரு வீத மானவர்களே பயங்கரவாதம் மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ். என்பவற்றுடன் தொடர்பு பட்டிருக்கலாம் இவ்வாறு இருக்க முஸ்லிம் சமூகத்தை பயங்கரவாதத்துடன் ஒப்பிட வேண்டாம் என ஊடக வாயிலாக நீதியமைச்சர் கூறியுள்ளார் என முன்னாள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை பிரதியமைச்சரும் மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாடாளுமன்றில் சமூக உரிமைகள் பற்றிப் பேச வேண்டும். யாழ் மேயர் மணிவண்ணன் கைதுசெய்யப்பட்ட போது கட்சி மற்றும் அமைப்புக்கள் என எவ்வித பாகுபாடுமின்றி விக்னேஸ்வரன்,சம்மந்தன், சுமந்திரன் மற்றும் கஜேந்திரகுமார், போன்றவர்கள் நாடாளுமன்றத்தில் அவரின் விடுதலைக்காக ஓங்கி ஒலித்தார்கள். அதேபோன்று முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளுக்காக ... மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டும். இது போன்று தவ்வா அமைப்புக்கள் நல்லதைச் செய்தார்கள். கிணறு, குடி தண்ணீர், வீட்டு வசதிகள் என பல உதவிகளை முஸ்லிம், சிங்கள, தமிழ், கிறிஸ்தவ மக்களுக்காகவும் நல்லதை செய்துள்ளார்கள். இப்போது அந்த அமைப்பைத் தடை செய்துள்ளார்கள். இதனை கருத்திற்கொண்டு நாடாளுமன்றத்தில் வாய் மூடிகளாக, மௌனமாக இருக்காமல் சமூகப் பிரச்சினைகள் பற்றி ஒன்று கூடி ஓரணியில் உரிமைகளுக்காக ஒன்றிணைய வேண்டும்.

முஸ்லிம்கள் பயங்கரவாதத்தை விரும்புபவர்கள் அல்லர். அப்பாவி முஸ்லிம்களை கொச்சைப்படுத்த நினைக்க வேண்டாம். அரசுக்கு விசுவாசமாக ஒன்றிணைந்து நாம் செயற்பட வேண்டும். தீவிரவாதத்துடன் ஒப்பிட்டு கோர்க்க நினைப்பவர்களை இணங்கண்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது தாய் மொழி தமிழாக இருந்தாலும் ஐந்து வயதில் இருந்து ஒரு பிள்ளை அரபி மொழியை தங்களது தொழுகைகளை நிறைவேற்ற கற்பது குற்றமல்ல. அரபி மொழியில் தான் குர்ஆனைக் கற்க வேண்டும். இதனை ஏன் தடுக்க வேண்டும் - என்றார். (ப-இ)



# சஹ்ரானின் மாமன் கைது

கொழும்பு,ஏப்.24
உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான குண்டுதாரி சஹ்ரான் ஹாசீமின் மாமனார் உள்ளிட்ட மூவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குளியாப்பிட்டி கெகுனகொல்லப் பிரதேசத்தில் வைத்தே மூவரும் கைது செய்யப்பட்டனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சஹ்ரான் ஹாசீம் மற்றும் அவரது ஆதரவாளர்களால் நடாத்தப்பட்ட அடிப்படைவாத வகுப்புக்களில் கலந்து கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரிடமும் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நண்பர்களான முதலைகள்

மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள புர்கினோ பாசோ நாட்டில் இருக்கிறது பாஸோல் கிராமம். இங்கே மோசிஸ் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் முதலைகளுடன் மிகவும் நெருங்கிப் பழகுகிறார்கள். இந்தக் கிராமத்தில் உள்ள குளத்தில் சுமார் 150 முதலைகள் வசிக்கின்றன. குளத்தில் அமர்ந்து பெண்கள் துணி துவைக்கிறார்கள். குளத்துக்கு அருகில் இருக்கும் நிலத்தில் ஆடுகளை மேய்க்கிறார்கள். குழந்தைகள் குளக்கரைகளில் விளையாடுகிறார்கள். இவர்களுக்கு அருகிலேயே முதலைகள் ஓய்வெடுக்கின்றன. சிலர் முதலைகளுக்கு அருகிலோ அல்லது அதன் மீதோ அமர்ந்து அரட்டையடிக்கிறார்கள். மனிதர்களுக்கும் முதலைகளைக் கண்டு பயமில்லை. முதலைகளுக்கும் மனிதர்களைக் கண்டு பயமில்லை.
15ஆம் நூற்றாண்டில் இந்தக் கிராமத்தில் மழையே இல்லை. எங்கும் வறட்சி நிலவியது. மக்கள் என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தபோது, சில முதலைகள் இந்தக் குளத்தை மக்களுக்கு அடையாளம் காட்டின. அப்போதுதான் இப்படி ஒரு குளம் இருப்பதே அவர்களுக்குத் தெரிந்தது. அன்று முதல் முதலைகள் மீது மக்கள் மிகவும் அன்பும் அக்கறையும் காட்டி வருகின்றனர். முதலைகளுக்கு அவ்வப்போது கோழி, இறைச்சி போன்றவற்றையும் வழங்குகிறார்கள். முதலை இறந்து போனால், இறுதிச் சடங்குகளை நடத்தி, புதைக்கவும் செய்கிறார்கள். ஆண்டுக்கு ஒரு முறை முதலைகளைக் கொண்டாடும் விதத்தில் ஒரு திருவிழாவையும் நடத்துகிறார்கள். 'இந்த முதலைகளால்தான் நாங்கள் பாதுகாப்பாக இருக்கிறோம். அதற்காகவே இந்த அன்பைக் காட்டுகிறோம். எனக்கு 70 வயதாகிறது. இந்த 70 ஆண்டுகளில் முதலை கடித்தோ, தாக்கியோ ஒரு சம்பவம் கூட நடந்ததில்லை. ஆபத்து அறியாமல் அருகில் சென்று விளையாடும் குழந்தைகளைக் கூட முதலைகள் பொம்மை போலப் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றன.
எங்கள் முன்னோர்களுக்கு இவை தீங்கு இழைக்க மாட்டோம் என்று சத்தியம் செய்து கொடுத்ததாக ஒரு செவிவழி கதை இருக்கிறது. அது உண்மை என்பது போலதான் இவையும் எங்களிடம் நடந்துகொள்கின்றன' என்கிறார் கிராமத்துப் பெரியவர் ஒருவர்.




## பேய் படத்தில் விவேக்?

சுந்தர்.சி இயக்கத்தில் உருவான அரண்மனை படத்தின் 2 பாகங்கள் இதுவரை வெளிவந்துள்ளன. இந்த 2 பாகங்களும் வருமானத்தை அள்ளிக் குவித்தது. தற்போது அரண்மனை படத்தின் மூன்றாம் பாகம் தயாராகியுள்ளது. சுந்தர்.சி இந்தப் படத்தையும் இயக்கி உள்ளார்.
கதாநாயகனாக ஆர்யாவும், ஜோடியாக ராஷி கண்ணா, அண்ட்ரியா, சாக்ஷி அகர்வால் ஆகிய 3 கதாநாயகிகள் நடித்துள்ளனர். விவேக், யோகி பாபு ஆகியோர் நகைச்சுவை வேடங்களில் வருகின்றனர்.
படப்பிடிப்பு முடிந்து தற்போது பின்னணிப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இந் நிலையில், இப்படத்தின் முதல் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. சுந்தர்.சி, ஆர்யா, விவேக், அண்ட்ரியா, ராஷி கண்ணா, யோகிபாபு ஆகியோரது தோற்றங்களுடன் கூடிய இந்த முதல் போஸ்டர் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.



## கைலாசாவில் இந்தியர்களுக்கு கதவடைப்பு

கொரோனா பரவலின் இரண்டாம் அலை இந்தியாவில் தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் இந்தியாவிலிருந்து கைலாசா வரும் பக்தர்களுக்குத் தற்காலிகமாக அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது என்று நித்தியானந்தா அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்.
சர்ச்சைக்குரிய சாமியார் என்று அழைக்கப்படும் நித்தியானந்தா, கைலாசா என்ற பெயரில் தனித் தீவு உருவாக்கியுள்ளார். அங்கு வியாபாரம் மேற்கொள்ள முடியும் என்றும் அறிவித்திருந்தார்.
இந்த நிலையில் நித்தியானந்தாவின் கைலாசா நிர்வாகத்தின் அறிவிப்பு அண்மையில் வெளியாகியுள்ளது. அதில், கொரோனா பரவல் பல நாடுகளில் தீவிரமடைந்திருப்பதால், கைலாசா நாட்டுக்கு இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், மலேசியா மற்றும் பிரேசில் என்று நோய்ப் பரவல் அதிகமாக உள்ள நாடுகளிலிருந்து வரும் பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்படாது. கைலாசாவில் தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டிருக்கும் அனைவரும் இந்த உத்தரவை உடனடியாக நடைமுறைப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறோம், என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'ஆளே இல்லாத டீக்கடையில யாருக்குடா டீ ஆத்துறாய்?' என்றவாறாக நித்தியானந்தாவின் பதிவு இருக்கின்றது.

## நீதிமன்றை நாடிய 'ரைசா'



விஜய் தொலைக்காட்சியின் 'பிக்பொஸ்' நிகழ்ச்சியின் மூலம் அறிமுகமானவர் நடிகை ரைசா. யுவன் சங்கர்ராஜா தயாரிப்பில் 'பியார் பிரேமா காதல்' படத்தில் 'பிக்பொஸ்' புகழ் ஹரிஸ் கல்யாணுக்கு ஜோடியாக நடித்தார்.
இந்தப் படம் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து அவருக்கு சினிமா வாய்ப்புகள் பல கிடைத்துக் கொண்டிருக்கின்றன. தன்னுடைய உடல் வடிவமைப்பில் மிகுந்த அக்கறை கொண்ட ரைசா சில தினங்களுக்கு முன்பாக தனியார் தோல் பராமரிப்பு மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டார்.
அங்கு தனக்குப் பொருத்தமற்ற சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் தனது முகம் வீங்கியிருப்பதாகவும், குருதிக் கசிவு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு தனது வீங்கிய முகத்துடன் படத்தை இன்ஸ்டகிராமில் வெளியிட்டுள்ளார். ரசிகர்கள் அவரது முகத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளனர். இதேவேளை, தனது முகம் இவ்வாறு மாறுவதற்கு மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட தவறான சிகிச்சை தான் காரணம் என்று ரைசா வழக்குத் தொடுத்துள்ளார்.

## இன்றைய நாள்





**மேடம்**: சொத்து சம்பந்தமான முயற்சிகளில் இருந்த தடை நீங்கும். பணியிடத்துக்கும் உங்களுக்குமான பந்தம் கூடும். கடன் குறையும். முன்பு மகிழ்ச்சி தந்த விடயங்கள் சிறு எரிச்சல் தரும்.

**இடபம்**: புதிய கருத்துக்களைச் சொல்லி பாராட்டுப் பெறுவீர்கள். வேண்டிய ஒருவர் மூலம் மகிழ்சியான செய்திகள் வரும். கொண்டாட்டம் அதிகரிப்பதால் சிரித்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்**: வேறு வேலை மாறும் முயற்சியில் வெற்றி உண்டு. தந்தையின் புத்திசாலித்தனத்தால் நன்மை விளையும். திடீர் அதிர்ஷ்டம் ஏற்படும். பண வரவு உண்டு.

**கடகம்**:நிகழ்வுகளில் வேகம் குறையும். மகிழ்ச்சியாக இருப்பீர்கள். சகோதர, சகோதரியுடன் சண்டைகளும் விவாதங்களும் வேண்டாம். எதிர்பாராத சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள்.

**சிம்மம்**:பெற்றோர் உடல்நலம் பற்றிய பயம் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள். சந்திக்க நினைத்தவர் மூலம் நற்செய்தி வரும். பாராட்டுக் கிடைக்கும். உடற்பயிற்சியில் கவனம் கூடும்.

**கன்னி**:எதிர்பாராத நபருடன் சந்திப்பு நிகழும். ஓய்வு அதிகரிக்கும். அக்கம் பக்கத்தினருடன் இருந்த பிரச்சினையைத் தீர்ப்பீர்கள். இளைஞர்களின் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.



**துலாம்**: மேலதிகாரிகள் பாராட்டும்படி நடந்து கொண்டு மகிழ்வீர்கள். நீங்கள் திட்டமிட்ட விடயங்கள் அனுகூலமாக முடியும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்**: மற்றவர்களை மகிழ்வித்து மகிழ்வீர்கள். தெளிவு பிறக்கும். பணத்தை சீரான முறையில் கையாண்டு பலன் அடைவீர்கள். மனதில் உற்சாகம் பொங்கும்படியான செய்தி ஒன்று வரும்.

**தனுசு**: பொது இடங்களில் பணத்தைப் பற்றி கவனமாக இருப்பது நல்லது. அவமானப்படுத்தியவர்கள் உங்கள் உதவியை நாடி வருவார்கள். சிறு கசப்பு உருவாகலாம்.

**மகரம்**: தடைப்பட்ட விடயங்கள் உங்களின் முயற்சியால் கூடிவரும். உங்கள் அலுவலகத்தில் ஏற்படும் சலசலப்பைத் தீர்ப்பீர்கள். உயர் பதவியில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்**:சகிப்புத் தன்மை அதிகரிப்பதால் மனக்கசப்புகள் மாறும். வாக்குக் கொடுத்தவர்களால் ஏற்பட்ட ஏமாற்றங்கள் தீரும். வெளிநாட்டுக் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்.

**மீனம்**: சம்பள உயர்வோடு கூடிய பதவி உயர்வு கிடைக்க தாமதமாகலாம். அவசரப்பேச்சால் சங்கடத்தை சந்திக்க வேண்டி வரும். பண வரவும் கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் அண்மைக்கால நடவடிக்கைகளால் தேரர்களுக்கு ஞானம் பிறந்திருக்கும்

## ஐ.தே.க. தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 24**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆதரவு வழங்கிய மகா சங்கத்தேரர்கள், அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, தெளிவடைந்திருப்பர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தற்போதைய அரசு கொழும்பு துறைமுக நகரத்துக்குரிய இடத்தின் உரிமையை சீனாவுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. கடந்த காலத்தில் ரணில் விக்ரமசிங்க சீனாவுடன் பேச்சுக்களை நடத்தியதுடன், அந்த இடத்தை இலங்கைக்கு சொந்தமாக்கிக் கொள்வதற்கும், அதற்குப் பதிலாக அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும், சீனாவுக்கு 99 வருடங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

அது மாத்திரமன்றி துறைமுக நகரப்பகுதி இலங்கை வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டதுடன், கொழும்பு நிர்வாக மாவட்டத்திலும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

எனினும் நாட்டின் தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதாக கடந்த காலங்களில் எம்மீது குற்றஞ்சாட்டி வந்த ராஜபக்ச அரசே, தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு வழங்குகின்றது என்பது தெளிவாகியுள்ளது - என்றார். (ம-4)

# அரியவகை ஆந்தை மணல்தீவில் மீட்பு



கொழும்பு, ஏப். 24

காயமடைந்த நிலையில், அரிய வகை ஆந்தை ஒன்று புத்தளம் மணல்தீவு பகுதியில் மீட்கப்பட்டது. குறித்த ஆந்தை மரத்திலிருந்து கீழே வீழ்ந்த நிலையில் அதை அவதானித்த நபரொருவர், புத்தளம் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவலை வழங்கினார்.

அதனையடுத்து மீட்கப்பட்ட ஆந்தை, நிக்கவெரெட்டிய மிருக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. (ம-4)

## ஹரினின்...

றும் கைது வேட்டை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சபையில் நேற்று சரமாரியாக கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்களுக்கிடையில் கடும் சொற்போரும் மூண்டது. இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த முன்னோக்கி வந்து எதிரணி உறுப்பினர்களை மிரட்டும் வகையில் செயற்பட்ட சம்பவமும் சர்ச்சையாக மாறியது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

ஆரம்ப கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஹரின் பெர்னாண்டோ விவகாரம் தொடர்பில் சபையின் கவனத்தை ஈர்த்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர், நாடாளுமன்றத்தில் வெளியிடும் கருத்தை வெளியில் சவாலுக்குட்படுத்த முடியாது. அதற்கான சிறப்புரிமை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்றது. ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எவ்வாறு விசாரணை கோர முடியும் என்று ரஞ்சித் மத்தும பண்டார கேள்வி எழுப்பினார்.

முக்கிய தகவல்களை ஹரின் அம்பலப்படுத்திவிட்டதால், ஒரு வருடத்துக்கு முன்னர் நடந்த சம்பவம் தொடர்பில் அவரை விசாரணை பொறிக்குள் சிக்கவைக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். அது தொடர்பில் பலகோணங்களில் கேள்விகளையும் எழுப்பினர்.

இவற்றுக்கு தனி ஒருவராக ஆளுங்கட்சி பிரதம கொறடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பதிலளித்துக்கொண்டிருந்தார். இந்நிலையில் எழுந்த இராஜாங்க அமைச்சர் ஹிந்திக்க அனுருத்த, ஜே.வி.பி.யின் தேசியப் பட்டியலில் இப்ராஹிம் என்பவர் இருந்தார். அது தொடர்பிலும் கட்சி பேதமின்றி சி.ஐ.டியில் முறைப்பாடு செய்யவேண்டியுள்ளது, என்று சுட்டிக்காட்டினார். இதனையடுத்து எழுந்த அநுரகுமார திஸாநாயக்க, ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி வெவ்வேறான கருத்துகளே இங்கு முன்வைக்கப்படுகின்றன. இதனை நாம் எதிர்க்கின்றோம். மண் கடத்துபவர்கள் மற்றும் சட்டவிரோத வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் தொடர்பான சாட்சிகளும் உள்ளன. சி.ஐ. டி.யினர் என்னை அழைத்தால் எல்லாத் தகவல்களையும் வெளியிடத் தயார். என்றார்.

அநுரகுமார இவ்வாறு உரையாற்றிக் கொண்டிருக்கையில் பின்வரிசையில் இருந்து முன்வரிசைக்கு வந்த இராஜாங்க அமைச்சர் இந்திக்க, கை நீட்டி எதிரணி உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் செயற்பட்டார். இது தொடர்பில் ரஞ்சித் மத்தும பண்டார சபாநாயகரிடம் முறையிட்டார். இதனையடுத்து ஆசனத்துக்குச் செல்லுமாறு இந்திக்கவுக்கு சபாநாயகர் உத்தரவிட்டார்.

இவ்வாறு சர்ச்சை நீடித்ததால் எழுந்த சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன, சபை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சபாநாயகரிடம் கோரியதுடன், சபை நடவடிக்கைகளை மே மாதம் 4 ஆம் திகதி வரை ஒத்திவைக்குமாறு கோரினார்.

இந்நிலையில் விவாதத்தில் உரையாற்றுமாறு ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு சபாநாயகர் அழைப்பு விடுத்தார். இதன்போது கருத்து வெளியிட்ட ரஞ்சித் மத்தும பண்டார, நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்டால் கைது செய்யப்படும் நிலை காணப்படுகின்றது. ஆளுங்கட்சியினர் முறைப்பாடு செய்கின்றனர். எனவே, நான் உரையாற்றினால் கைது இடம்பெறாது என்ற உத்தரவாதத்தை சபாநாயகர் வழங்க வேண்டும். கருத்து சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும், என்று வாதிட்டார். அவருக்கான நேரம் முடிந்ததால் அடுத்த பேச்சாளரை சபாநாயகர் அழைத்தார். (ஒ44)

# கண்காட்சியும் விற்பனையும்

உலக புத்தக தினத்தை முன்னிட்டு சிறகுகள் அமையம் மற்றும் எங்கட புத்தகங்கள் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ள புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நேற்று ஆரம்பமாகியது.

209, பலாலி வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள எழுதிரள் நிலையத்தில் காலை 9 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை இக் கண்காட்சி நடைபெறுகின்றது.

கண்காட்சியும், விற்பனையும் இன்றும் நாளையும் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# அதிபருக்கு சேவை நயப்புவிழா

கொடிகாமம், ஏப்.24

கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் 11 வருடங்களாக அதிபராக கடமையாற்றிய திருமதி மீனலோஜினி இதயசிவதாஸின் சேவை நயப்பு விழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பாடசாலையின் பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திருமதி காஞ்சனா சிவகரன் தலைமையில் முற்பகல் 9.30மணிக்கு இவ் விழாநடைபெறவுள்ளது. (த-159)

## புதிய...

இந்த அறிவுறுத்தல்களை மக்கள் மே மாதம் 31ஆம் திகதிவரை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வீட்டில் இருந்தும் இருவர் மட்டும் வெளியிடங்களில் நடமாட வேண்டும். அநாவசிய நடமாட்டங்களைத் தவிர்க்க வேண்டும்.

பொதுப் போக்குவரத்தில் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பயணிகளை ஏற்ற வேண்டும். வாடகை வாகனங்களில் இருவருக்கு மேற்படாது பயணிகளை ஏற்ற வேண்டும்.

அனைத்து நிறுவனங்களும் ஆகக் குறைந்த பணியாளர்களுடன் இயங்கவேண்டும். அரசதிணைக்களங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகக் குறைந்த ஆளணிகளுடன் இயங்குவதுடன், ஏனையோர் வீட்டில் இருந்து பணியாற்றுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

கருத்தரங்குகள், செயலமர்வுகளை 50க்கு குறைந்த நபர்களுடன் மேற்கொள்ள வேண்டும். விடுதிகள், தங்குமிட விடுதிகளில் கொள்ளவின் 50 சதவீதத்திருக்கே அனுமதிக்க வேண்டும்.

திருமணம் உள்ளிட்ட நிகழ்வு மண்டபங்களின் ஆசனங்களுக்கு அமைய 50 சதவீதமானோர் அல்லது 50 பேர் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும்.

நிகழ்வுகள் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியின் அனுமதியுடன் அவரது கண்காணிப்பின் கீழ் நடத்தப்பட வேண்டும்.

வர்த்தக நிலையங்களுக்குள் ஒன்றரை மீற்றர் இடைவெளியில் வாடிக்கையாளர்கள் அனுமதிக்கப்பட வேண்டும். சந்தைகளின் கொள்ளவின் 50 சதவீத வியாபார நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

பாடசாலை வகுப்பறையில் 50 வீத மாணவர்களுக்கும் இறுதிச் சடங்குகளில் ஆகக் குறைந்தது 25 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்க வேண்டும் என்று அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ-இ)


# FACULTY OF SCIENCE UNIVERSITY OF JAFFNA

**Registration for General/Honours Degree Examinations in Science (Second Semester) - 2019**

The above End of Course Examinations are scheduled to be held in May & June 2021. The Examination Timetable is available in the faculty website http://www.sci.jfn.ac.lk/.

All the students of the Faculty of Science are requested to register for the above examination on or before 04/05/2021 by filling the online form which is available in the faculty website.

22/04/2021
Registrar


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 ஆவது பல்கலைக்கழகமாக மட்டு. பல்கலைக்கழகம் அமையும்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.24

**இலங்கையில் தற்போது 16 பல்கலைக்கழகங்களே உள்ள நிலையில், எதிர்வரும் மே மாதம் 17 ஆவது பல்கலைக்கழகம் திறக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

சர்ச்சைக்குரிய மட்டக்களப்பு பல்கலைக்கழகம், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட வளாகமாகவோ, அல்லது தனியானதொரு பல்கலைக்கழகமாகவோ மாற்றப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதனால் இலங்கையில் 17 ஆவது பல்கலைக்கழகமாக மட்டக்களப்பு பல்கலைக்கழகம் திறக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு பட்டங்களை வழங்கும் அனுமதியை உயர்கல்வி அமைச்சோ, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவோ வழங்கவில்லை.

எனினும் கொழும்பு மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களை விட இந்த வளாகத்தில் வசதிகளும், கட்டடங்களும் அதிகம் இருப்பதால், பல்கலைக்கழக மாணவர்களுக்காக அதனைப் பயன்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

கடந்த காலங்களில் பல்கலைக்கழகங்களுக்கு 30 ஆயிரம் மாணவர்கள் மாத்திரமே இணைக்கப்பட்டனர். இந்த ஆண்டில் 41 ஆயிரம் மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படுவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-4)

## மின்னல் தாக்கத்தில்

# மாடுகளை இழந்தவருக்கு மாட்டுத் தொழுவம் கையளிப்பு



மட்டக்களப்பு, ஏப்.24

வாகரை மாங்கேணி பிரதேசத்தில் மின்னல் தாக்கத்தால் கால்நடைகளை இழந்த பண்ணையாளருக்கு மாட்டுத் தொழுவம் அமைக்கப்பட்டு, நேற்று அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி ஏற்பட்ட மின்னல் தாக்கத்தால் பண்ணையாளர் ஒருவரின் 27 மாடுகள் உயிரிழந்தன. மிகுதியான மாடுகளை பராமரிப்பதில் பண்ணையாளர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினார்.

இந்த நிலையில் குறித்த பண்ணையாளரின் கால்நடைகளைப் பராமரிக்கும் வகையில் பார்ம் ஹெமி நிறுவனம் மற்றும் கால் நடைகள் உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களின் நிதிப் பங்களிப்பில் மாட்டுத் தொழுவம் அமைக்கப்பட்டு நேற்று அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட கால்நடைகள் உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் திருமதி. உதயராணி குகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய மற்றும் கால்நடைகள் அமைச்சின் செயலாளர் திருமதி. கலாமதி பத்மராஜா, கால் நடைகள் உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் மருத்துவர் எம்.ஏ.எம்.பாஸி, பார்ம் ஹெமி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் உதித வனிகசிங்க, பார்ம் ஹெமி நிறுவனத்தின் வணிக முகாமையாளர் மலக அரவிந்த, திருகோணலை மாவட்ட கால்நடைகள் உற்பத்தி சுகாதார திணைக்கள பிரதிப் பணிப்பாளர் எஸ்.நிசாம்டீன், அம்பாறை மாவட்ட கால் நடைகள் உற்பத்தி சுகாதார திணைக்கள பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.நதீர் மற்றும் கால் நடைகள் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-150)

# சீனா நட்புறவுச் சங்கத்தின் தலைவரானார் நாமல்



கொழும்பு,ஏப்.24

இலங்கை மற்றும் சீனா நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் புதிய தலைவராக, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச நியமிக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்றில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை மற்றும் சீன நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் முதல் மலர்ச்சி கூட்டத்தில் அவருக்கான நியமனம் வழங்கப்பட்டது. (ப-4)

# தோட்டத் தொழிலாளர்களை வஞ்சிக்கும் தொழிற்சங்கம்

## திகாம்பரம் குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.24

பெருந்தோட்டத் தொழிலாளர்களை வஞ்சிக்கும் செயற்பாட்டில், பெருந்தோட்டத் தொழிற்சங்கம் ஒன்று ஈடுபட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தொழிலாளர்களுக்கு நாளாந்த வேதனமாக ஆயிரம் ரூபா வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும் தோட்டத் தொழிலாளர்களை மேலதிகமாக 2 கிலோகிராம் தேயிலை பறிக்குமாறு குறித்த தொழிற்சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் தோட்ட மக்களைக் காட்டிக்கொடுக்கும் செயற்பாடுகள். இதனை எதிர்ப்பதற்கு அனைத்து பெருந்தோட்ட மக்களும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ப-4)

# இலங்கைப் பிக்குகள் பாகிஸ்தான் பயணம்

கொழும்பு,ஏப்.24

இலங்கையைச் சேர்ந்த மூத்த பிக்குகள் அடங்கிய உயர்மட்டக் குழுவினர் பாகிஸ்தானுக்குப் பயணித்துள்ளனர். இவர்கள் பாகிஸ்தான் ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்திக்கவுள்ளனர். அங்கு புகழ்பெற்ற பாரம்பரிய இடங்களையும் பார்வையிடவுள்ளனர். அத்துடன் லாகூர் மற்றும் இஸ்லாமாபாத்தில் உள்ள பல்வேறு வரலாற்று மற்றும் தொல்பொருள் இடங்களையும் பார்வையிடவுள்ளனர்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் இலங்கைப் பயணத்தை அடுத்து, கடந்த 19 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து பாகிஸ்தானுக்கும் பயணித்த இக் குழுவினரை, பாகிஸ்தான் அரசின் பிரதிநிதிகள் (ஓய்வு பெற்ற) ஜெனரல் சுஹைல் அமானுடன் கலந்துரையாடினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-4)

# அதிவேக வீதியில் சாகசம்; ஐவர் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஏப்.24

தெற்கு அதிவேக வீதியில், காரின் ஜன்னலில் அமர்ந்தவாறு பயணித்து, சர்ச்சையை ஏற்படுத்திய ஐவரும், 5 லட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

தெற்கு அதிவேக வீதியில் கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை பாதுகாப்பற்ற முறையில், காரின் ஜன்னலில் அமர்ந்து பயணித்தனர் என்ற குற்றச்சாட்டில், காரின் சாரதி உட்பட ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டு பாணந்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்களை சரீரப் பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-4)

# விபத்துக்களால் பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் உயிரிழப்பு

## அமைச்சர் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 24

போரால் உயிரிழந்தவர்களைவிட விபத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகம் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதிகளுக்கு எதிராக 30 ஆண்டு காலப் போரில் உயிரிழந்தவர்களை விட கடந்த ஒரு தசாப்தத்தினுள் விபத்துக்களால் உயிரிழந்தவர்களது எண்ணிக்கை அதிகமானது.

மதுபோதையில் வாகனம் செலுத்துதல் மற்றும் போதைப்பொருள்களைப் பயன்படுத்திய பின்னர் வாகனங்களைச் செலுத்துதல் ஆகிய காரணிகளால் தான் அதிகளவான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன, என்று அமைச்சர் குறிப்பிட்டார். (ஒ-இ)

# இலங்கை மீனவர்களை விடுவித்தது மியான்மர்

கொழும்பு,ஏப்.24

தடுத்து வைக்கப்பட்டிருந்த 12 இலங்கை மீனவர்களையும் மியான்மர் அரசு நேற்று விடுவித்துள்ளது.

12 மீனவர்களும் மியான்மாரின் யெங்கனில் இருந்து சிங்கப்பூர் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் சிங்கப்பூரை வந்தடைவர். பின்னர் அங்கிருந்து மற்றுமொரு விமானத்தில் கொழும்பை வந்தடையவுள்ளனர்.

நாட்டுக்கு வருகை தரும் மீனவர்களை சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக தனிமைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

திருகோணமலையிலிருந்து கடந்த ஜனவரி மாதம் மீன் பிடிக்கச் சென்ற 12 மீனவர்களும், மியான்மர் கடல் எல்லைக்குள் அத்து மீறினர் என்ற குற்றச்சாட்டில், கடந்த பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி மியான்மார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு எதிராக 4 குற்றச்சாட்டுக்களின் கீழ் அந்த நாட்டு நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. குறித்த வழக்கு 5 தவணைகளில் மியான்மர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வாறான நிலையில் கடந்த ஏப்ரல் 2 ஆம் திகதி மியான்மர் நீதிமன்றம் 12 இலங்கை மீனவர்களுக்கும் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தது.

இதனையடுத்து 12 பேரும் மியான்மரின் பத்தேன் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். தற்போது அந்த நாட்டின் தேசிய பொது மன்னிப்பு தினத்தை முன்னிட்டு மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்கு



தரமான சீமெந்துக் கற்கள்
மற்றும் மணல் விற்பனைக்கு
உண்டு.

**076 243 4533**


# மோதலில் மாணவன் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.24

அச்சுவேலிப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் மாணவர்களிடையே நடந்த மோதலில் மாணவன் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

க.பொ.த. சாதரண தர மற்றும், க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களிடையே ஏற்பட்ட முறுகல் நிலைமையே மோதலுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் பாடசாலைக்கு வெளியே மோதலில் ஈடுபட்ட நிலையில் மாணவர் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த மாணவர் அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-26)


## சர்வதேச லயன்ஸ் கழகங்கள்

We Serve

மாவட்டம் : 306 B1 - இலங்கை

பிராந்தியங்கள்: 9/12 வலயங்கள் 17/24

பூநகரி மத்திய விளையாட்டுக் கழகத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க
மானிப்பாய் வட்டம், மன்னார், கிளிநொச்சி மற்றும் மல்லாவி
லயன்ஸ் கழகங்கள் ஒன்றிணைந்து
கொச்சிகடை லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் நடாத்தும்

**"கண்ணுக்கு முதலிடமளிக்கும் சேவைத்திட்டம்"**

**நேரம் : 25.04.2021 (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 மணிமுதல்**
**இடம் : பூநகரி மத்திய விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள கட்டடம்**

பூநகரி வாழ் நலிவுற்ற மக்களுக்கு தகுதி வாய்ந்த கண் பரிசோதகர்களால்
பரிசோதித்து வாசிப்பதற்குரிய மூக்கு கண்ணாடி வழங்கப்படும்.

**இந்நிகழ்வை மாவட்டம் 306B1 - ஆளுநர் சபையின் பிரதிச் செயலாளர் - வைத்திய கலாநிதி M. கதிர்காமநாதன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்**

**குறிப்பு :**
தற்போதைய சூழ்நிலைக் கேற்ப சுகாதாரவிதி முறைகள் பேணப்பட வேண்டும். அத்துடன் தேவைப் படுவோருக்கு "மாஸ்க்" வழங்கப்படும்.

**லயன் ஜெயஜோதி தங்கராஜா**
தலைவர்,
மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்

**லயன் S. யதீஸ்வரன்**
தலைவர்,
கிளிநொச்சி லயன்ஸ் கழகம்

**லயன் S. கிருபாகரன்**
சேவை ஒருங்கிணைப்பாளர்
மானிப்பாய் வட்ட கழகம்

**லயன் S. மௌலீசன்**
தலைவர்,
மன்னார் லயன்ஸ் கழகம்

**லயன் S. ராஜசிவேந்திரன்**
தலைவர்,
மல்லாவி லயன்ஸ் கழகம்



## வேலையாட்கள் தேவை

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள உணவகம் ஒன்றிற்கு சமயல். Supplier. சிற்றுண்டி தயாரிக்க தெரிந்தவர்கள் (ஆண். பெண்) உடனடியாகத் தேவை.
PCR. மருத்துவ சன்றிதழ் வைத்திப்பவர்கள் விரும்பத்தக்கது.

**077 222 8842, 077 623 8129**


## மரண அறிவித்தல்

தோற்றம்
30 . 05 . 1975



மறைவு
22 . 04 . 2021

**காராளசிங்கம் ஜெயந்தன்**

புங்குடுதீவை சொந்த இடமாகவும், திருநெல்வேலி பால்பண்ணை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட காராளசிங்கம் ஜெயந்தன் கடந்த (22.04.2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் உடையார்கட்டு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அங்குள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**108, பால்பண்ணை வீதி,**
**திருநெல்வேலி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 334 8429, 077 087 9427**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
30 . 06 . 1937



மறைவு
05 . 05 . 2020

திதி: திரியோதசி

### அமரர் தனலட்சுமி சரவணமுத்து

பண்பின் உறைவிடமாய் பாசத்தின் திருவுருவாய்
என்றும் எல்லோர் மனதிலும் அணையாத சுடராய்
வாழ்ந்து கொண்டு இருக்கின்றீர்கள் அம்மா!
எங்கள் உயிராய் உணர்வாய்
எங்கள் இதயத்தின் நிறைவாய்
வாழ்க்கை என்னும் பாதையில்
எம்மோடு பயணித்த நீங்காத நினைவுகளும்
ஆண்டுகள் பல சென்றாலும் மறையாது
உம் நினைவுகள் என்றென்றும் எம்முடன் பயணிக்கும்

உங்கள் ஆத்மா சாந்தியடைந்து இறைவனை சேர
எல்லாம் வல்ல இறைவனை வேண்டி தினமும் உங்கள் பாதம் பணிகின்றோம்.

நாளை (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

**குடும்பத்தினர்**


## மணமகள் தேவை

முகாமைத்துவ உதவியாளர் (ஆண்)
திருவோணம், 31¼ பாவகிரகம்.
077 512 2931



**கணிதம், வரலாறு தரம் 6 - O/L வகுப்புக்கள்**

தனியாகவோ.குழுவாகவோ வீடுகளுக்கு வந்து அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். தேசிய, மாவட்டத்தின் சிறந்த பெறுபேறுக்காக வழிகாட்டும் ஆசிரியர்.
(தனியார் கல்வி நிலையங்களும் தொடர்பு கொள்ளலாம்.)

**தொடர்பு: 077 968 2097**



## வேலையாள்கள் தேவை

**கோயில் வேலைக்கு ஆள்கள்** தேவை.
விருப்பம் உடையோர் தொடர்புகொள்ளவும்.
077 055 8493, 077 899 6393




## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் பிரபல ஸ்ரூடியோ கலர் லாப்புக்கு வேலைக்கு பெண் ஊழியர்கள் தேவை.
077 773 0567, 074 004 9933


"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கின்றேன்
என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோவான் 11:25)

## 30 ஆம் நாள் நன்றி ஆராதனை



கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது குடும்பத் தலைவர்

### யோசப் அலோசியஸ் ஜெயராஜன்

அவர்களின் "நன்றி செலுத்தும் ஆராதனை இன்று (24.04.2021) சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால், இவ் ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.**

**[illegible] மேற்கு,**
**பருத்தித்துறை.**

**மனைவி**
**நவமணி அலோசியஸ் ஜெயராஜன்**
(ஓய்வு பெற்ற மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவின்...

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்தியாவில் தற்போது ஒட்சிசன் பற்றாக்குறை இருக்கின்றது. அவசர சிகிச்சை பிரிவுக்கு தட்டுப்பாடு உள்ளது. அதனால் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. எமக்கு இன்னும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படவில்லை. எனினும் மக்கள் பொறுப்புடன் செயற்படாவிட்டால் அவ்வாறான தொரு நிலைமை உருவாகக்கூடும். ஏனெனில் அவசர சிகிச்சை பிரிவு உள்ளிட்ட கட்டமைப்புகளுக்கென வரையறையொன்று உள்ளது.

புத்தாண்டுக்குப் பிறகு தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எதிர்காலத்திலும் அந்தத் தொகை மேலும் அதிகரிக்கப்படலாம். கடந்த காலங்களில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் 90 வீதமானோருக்கு நோய் அறிகுறிகள் தென்படவில்லை. தற்போது புதிய வகை வைரஸால் அறிகுறிகள் தென்படுகின்றன. இளைஞர்களும் இலகுவில் பாதிக்கப்படுகின்றனர்.

தற்போதைய நிலை தொடர்பில் அனைவரும் கவனம் செலுத்தி, பொறுப்புடன் செயற்படவேண்டும். புத்தாண்டு நிகழ்வுகளை நடத்த வேண்டாம். தேவையற்ற பயணங்களைத் தவிர்க்கவும். - என்றார். (எ-44)

## சுகாதார...

ணகி அம்மன் ஆலய பொங்கல் நிகழ்வை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வைகாசி விசாக பொங்கல் நிகழ்வு தொடர்பான முன்னாயத்த கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த மாவட்டச் செயலர் பக்தர்கள் காவடி எடுப்பதற்கு முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. வீதி, தெருக்களில் கடைகள் அமைப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. சுகாதார ஆலோசனைக்கு அமைவாக கோவிலுக்கு வராதவர்கள் மற்றும் முகக்கவசம் இல்லாமல் வருபவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள். ஆலயத்துக்கு வருகின்ற பக்தர்களை பதிவுசெய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தொற்று குறைவாக இருந்தாலும் வெளிமாவட்டங்களில் பரவல் அதிகரித்துள்ளதால் வெளிமாவட்டத்தவர்கள் ஆலயத்துக்கு வருவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது -என்றார்.

மாவட்டச் செயலர், க.விமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி எஸ். சிவகணேசன் மற்றும் தொற்று நோயியல் தடுப்பு மருத்துவ அதிகாரி வி.விஜிதரன், படை அதிகாரிகள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள், முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயம் மற்றும் வற்றாப்பளை ஆலய நிர்வாகத்தினர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மருத்துவர்கள், பிரதேச செயலாளர் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். (ஐ-19)

## நேற்று...

றாளர்கள் இனங்காணப்பட்டனர். தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 99 ஆயிரத்து 653 ஆக உயர்ந்துள்ளது.

அதேவேளை, கடந்த 24 மணி நேரத்தில் 151 பேர் சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர். கொரோனாத் தொற்றால் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 94 ஆயிரத்து 36 ஆக உயர்ந்துள்ளது. (எ-இ)

## நாட்டை முடக்கும்...

நாட்டை முடக்கும் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. போக்குவரத்துகளுக்கும் கட்டுப்பாடுகள் இல்லை. மக்கள்தான் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்று இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று மாலை நடத்திய சிறப்பு ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு காலத்தில் முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியைப் பின்பற்றாமை, மக்கள் கூட்டமாக கூடியமை மற்றும் புத்தாண்டு நிகழ்வுகள் ஆகியவற்றாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. நாங்கள் புத்தாண்டு காலத்தில் பயணத்தடைகளை விதிக்கவில்லை. ஆலோசனைகளை மாத்திரமே வழங்கியிருந்தோம்.

அதிக கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்படும் பகுதிகள் தேவையேற்படின் முடக்கப்படும். பொதுமக்கள் அநாவசியமான பயணங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். கூட்டம் கூடுவதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்களை மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். பொது மக்கள்தான் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் கடந்த சில நாள்களாக இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. எதிர்வரும் நாள்களில் வைரஸ் பரவல் தீவிரமடையும் என்று துறைசார் வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

புத்தாண்டு தினத்துக்குப் பின்னர் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரித்திருந்த நிலையில், தற்போது தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. 4 நாள்களுக்காவது நாட்டை முடக்காவிட்டால் பெரும் விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று தற்போது பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதேவேளை, பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டை முடக்க முடியாத நிலைமையில் அரசு இருக்கின்றது என்று பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தற்போது கொரோனாத் தொற்று நிலைமை ஆபத்தான கட்டத்தில் இருந்தாலும், பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டை முடக்க முடியாத இக்கட்டான நிலைமையில் அரசு உள்ளது என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதனால் எதிர்காலத்தில் சிக்கல்கள் ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## மிக வேகமாக...

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்தியாவில் கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரியில் சிறந்த சூழ்நிலையே காணப்பட்டது. ஆனால் தேர்தல் கூட்டம், கிரிக்கெட் போட்டி, புதிய வகையான வைரஸ் பரவல் என்பவற்றால் தற்போது அங்கு என்ன நடக்கின்றது என்பது அனைவருக்கும் தெரியும். அவசர சிகிச்சைப் பிரிவுகளுக்குக்கூட தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இலங்கையிலும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படாதிருக்கும் வகையில் நாம் நடந்துகொள்ள வேண்டும்.

எமது நாட்டிலும் புதிய வகையான கொரோனா வைரஸ் பரவி வருகின்றது. முதலாம் மற்றும் 2 ஆம் அலைகளிலிருந்து இது எவ்வாறு வேறுபட்டது என்பது தொடர்பாக ஆய்வு நடக்கின்றது. அது தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படும். முன்னர் ஒருவருக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டால் அவர் மூலம் இருவருக்குப் பரவும். ஆனால் புதிய வகையான வைரஸ் மூலம் ஒருவர் மூலம் ஐந்து அல்லது ஆறு பேருக்கு வைரஸ் பரவக்கூடிய அபாயம் இருக்கின்றது.

புதிய வகையான வைரஸ் தொற்றால் இளையவர்களுக்குக்கூட பாரதூரமான அறிகுறிகள் தென்படுகின்றன. அதனால் சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றவேண்டும். முகக்கவசத்தை உரிய வகையில் அணிய வேண்டும் - என்றார். (எ-44)

## யாழ்ப்பாணத்தில்...

று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடம் என்பற்றில் நேற்று 636 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 12 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டுள்ள ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் தொற்று உறுதி செய்யப்பட்ட கைதடி அரச திணைக்களம் ஒன்றில் பணியாற்றும் உத்தியோகத்தரின் குடும்பத்தினர் 4 பேருக்கு நேற்றுத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது. அவர்கள் திருநெல்வேலி பாரதிபுரம் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ26)

## பல்கலையில்...

திகதி இரவு, பல்கலைக்கழக நிர்வாகத்தால் உடைக்கப்பட்டது. தூபி உடைக்கப்பட்டமைக்கு எதிராக மக்களும், மாணவர்களும், அரசியல்தலைவர்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். பல்கலைக்கழக மாணவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதையடுத்து மீண்டும் தூபியை அமைப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் சம்மதம் தெரிவித்தது. கடந்த ஜனவரி மாதம் 11ஆம் திகதி மீண்டும் தூபி அமைப்பதற்கான அடிக்கல் துணைவேந்தரால் நடப்பட்டது. அதன்பின்னர் தூபி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தூபியின் கட்டுமானங்கள் நிறைவடைந்திருந்த நிலையில் நேற்றுத் தூபி திறக்கப்பட்டது. தூபியை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திறப்பார் என்று தெரிவிக்கப்பட்டபோதும், அவர் இதய நோய் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதால் நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை. (எ26,20)

## பாடசாலைகளை...

போதிலும், பாடசாலைகளை மூடுவதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை. பாடசாலைகளில் அவசர மருத்துவ தேவைக்கான அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. எனவே பெற்றோர்கள், மாணவர்கள் வீண் அச்சமடையத் தேவையில்லை.

இவ்வாறு கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

கொரோனா அச்சுறுத்தல் மீண்டும் ஏற்பட்டுள்ள நிலையில், பாடசாலைகளை மூடுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதா என்ற கேள்விக்கு அவர் இந்தப் பதிலை அளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா சவாலுக்கு மத்தியில் சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றி கல்வி நடவடிக்கைகளைத் தடையின்றி முன்னெடுக்கவே எதிர்பார்த்துள்ளோம்.

நாடளாவிய ரீதியிலுள்ள சகல பாடசாலைகளையும் ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டபோது, பிரபல பாடசாலைகள் சிலவற்றில் ஒரு சில மாணவர்களுக்குத் தொற்று ஏற்பட்டது. எனினும் இவர்கள் பாடசாலைச் சூழலில் தொற்றுக்கு உள்ளாகவில்லை. குடும்ப உறுப்பினர்கள் அல்லது பெற்றோருக்கு ஏற்பட்ட தொற்றின் காரணமாகவே அவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். இதேபோன்று சில ஆசிரியர்களுக்கும் தொற்றுறுதி செய்யப்பட்டது. இதன்போது ஏனைய மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு துரிதமான செயற்பாடுகள் ஊடாக அனைத்து மாணவர்களதும் கற்றல் செயற்பாடுகளுக்குப் பாதிப்பு ஏற்படாமல் தடுக்கப்பட்டது. எனவே தற்போதுள்ள சூழலிலும் இதே போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கவே எதிர்பார்க்கின்றோம். மீண்டும் பாடசாலைகளை மூடி மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை இடைநிறுத்துவதை விட, சவாலுக்கு மத்தியில் அதனை முன்னெடுத்துச் செல்வதே பொருத்தமானதாக அமையும் என்று எதிர்பார்க்கிறோம்- என்றார். (ப-4)

## ரி.ஐ.டியால்...

வர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

42 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார். விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து உயிரிழந்தவர்களின் பெயரில் அடையாள அட்டைகள், கடவுச்சீட்டுக்களைத் தயாரித்து நபர்களை வெளிநாடுகளுக்கு இவர் அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர். (எ110,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தோனேசியாவில்

# நீர்மூழ்கிக்கப்பல் மாயம் தேடும் பணிகள் தீவிரம்!



யகார்தா, ஏப். 24 இந்தோனேசியாவில் நீர்மூழ்கிக் கப்பலொன்று காணாமல் போயுள்ளது. அதைத் தேடும் பணியில் 6 போர்க் கப்பல்களும், 2 உலங்கு வானூர்திகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 400 இராணுவத்தினரும் களத்தில் இறக்கப்பட்டுள்ளனர்.

இந்தோனேசியா நாட்டின் கடற்படைக்கு சொந்தமானது நீர்மூழ்கிக் கப்பலே காணாமல் போயுள்ளது. பயிற்சியின் போதே மேற்படி கப்பல் காணாமல் போயுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இதையடுத்தே அந்தக் கப்பலைத் தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த கப்பலில் 53 மாலுமிகள் இருந்துள்ளனர். அவர்களின் நிலை தொடர்பிலும் தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

காணாமல்போன நீர்மூழ்கிக்கப்பல், மூழ்கியதாகக் கருதப்படுகின்ற இடத்தில் எண்ணெய்ப் பரவல் கண்டறியப்பட்டுள்ளது. இது, அந்த கப்பலின் எண்ணெய்த் தாங்கி சேதம் அடைந்திருக்கலாம் என்பதின் வெளிப்பாடாக இருக்கலாம் என கருதப்படுகிறது. அதுமட்டுமின்றி அந்தக்கப்பலின் மாலுமிகள் விட்டுச்சென்ற சமிக்ஞையாகவும் இருக்கக்கூடும் எனவும் கருதப்படுகிறது. (ம)


## Software Engineer, QA,UI/UX

கொழும்பில் சில பிரபல மென்பொருள் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுப்பதுடன், அனுபவமற்ற வர்களுக்கு வேலைவாய்ப்பினை பெறுவதற்கான 3 மாத பயிற்சியும் வழங்கப்படும்.

DEWMAS, 51, Amman Road, Nallur. | dewmasweb.com 074 138 3368, 021 315 2500

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் கோப்பாய் வீதியில், மெயின் றோட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 1½ பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.
(கோப்பாய் வீதி, கிருஷ்ணன் கோயிலுக்கு அருகாமை)
தொடர்பு கொள்ளும் நேரம் காலை 9.00 மணிமுதல் மாலை 5.30 மணிவரை

தொடர்பு :
077 468 3354,077 288 0152, 077 203 6402

## செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு



கேள்தகைமை குறைபாட்டினால் அவதிப்படுகின்றீர்களா? கவலை வேண்டாம் ரூபாய் 4999 /= மட்டுமே செலுத்தி, செவிப்புலன் கருவி ஒன்றினை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள். வீட்டிற்கே வந்து பரிசோதித்து வழங்குகின்றோம். விரையுங்கள் குறைந்த கையிருப்புக்கள் மாத்திரமே

076 417 1063

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், புன்னாலைக் கட்டுவன், அச்செழு வீதியில் 40 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்)
பலாலி வீதியில் அருகாமையில் இக்காணி உள்ளது.
விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 6323041, 076 7070 743

## வேலைவாய்ப்பு

Cashier, Supervisor, Accounts Clerk, Shop Keeper, Salesman, Sales Girl, Waiter, Helper, Labour

076 300 5506, 021 315 2500

## வேலையாட்கள் தேவை

சைவ உணவகமொன்றிற்கு அனுபவமுள்ள சமையலாளர், சமையல் உதவியாளர் தேவை.
வண்ணை சாந்தையர்மடம்,
கற்பக விநாயகர் கோவில் அருகாமை (K.K.S. றோட்)

074 093 0200

## தேவை

மேசன், கூலியாட்கள் தேவை. பழகவிரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்பு: 075 992 3497

## வேலையாட்கள் தேவை

Lovely Flower Center க்கு வேலை யாட்கள் (பெண்) தேவை.
18 - 30 வயதிற்கு இடைப்பட்டவர்கள்

தொடர்பு : 077 400 5023

## வீடு, காணி விற்பனைக்கு

சுன்னாகம், உடுவில் K.K.S. வீதியில் (பெரிய மதவடி) 28 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 271 4375

## வேலையாட்கள் தேவையா?

உங்கள் Vacancy களுக்கு பொருத்தமான உத்தியோகத்தர்களை எமது நிறுவனம் மூலம் தெரிவுசெய்யலாம்.

DEWMAS Job Bank
51, Amman Road, Nallur.
dewmasweb.com
074 138 3368, 021 315 2500

## வகுப்புகள் இடம்பெறுகின்றன

Germany, Swiss செல்வோருக்கான A1, A2 வகுப்புக்கள்
திருமணம் முடித்து London (UK) செல்வோருக்கான IELTS (Skill), A1, B1 வகுப்புக்கள் இடம்பெறும் மற்றும் ஆங்கிலம், சிங்களம், மற்றும் தமிழ் மொழி வகுப்புகள் இடம் பெறுகிறது. மற்றும் English சிங்களம், மற்றும் தமிழ் மொழி மூலமான வகுப்புக்கள் இடம்பெறும்

J.V Language Center
Palaly Road140, Parameswara Junction, Jaffna.
Mobile Number : 076 401 8564

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை கிழக்கு ஐயனார் வீதியில்
2 பரப்புக்காணி மட்டும்
விற்பனைக்கு உண்டு
(தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து 600 m தூரம்)
பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை (தரகர் தேவையில்லை)
ஒரு பரப்பு 5 இலட்சம்

077 814 7389, 077 614 7333

## பணியாளர் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல நகை விற்பனை காட்சி அறைக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை


- நகை விற்பனையில் அனுபவமுள்ள (ஆண்/ பெண்) விற்பனையாளர்கள்
- நகை வியாபாரம் பழகவிரும்புபவர்கள் (ஆண் / பெண்)
- கணினி அறிவு விரும்பத்தக்கது

ஆர்வமுடையோர் எதிர்வரும் 25,26, 27, 28 /4/2021 ஆம் திகதிகளில் சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்

சந்தோஷ் ஜீவலறிஸ்
இல.97A, 99V, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 02 . 1947



மறைவு 20 . 04 . 2021

# சின்னப்பு பத்மநாதன் (பாலு)

யாழ் ஆவரங்கால் சிவன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சின்னப்பு பத்மநாதன் (பாலு) அவர்கள் (20.04.2021) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு சோதிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற தம்பிநாதர் காசிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், கனகமனோகரி, சாமினி, செந்தூர்ச்செல்வன், செந்தூர்க்குமரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், வைரவநாதன், செல்லத்துரை, காலஞ்சென்ற குணரட்ணம், கௌரிதேவி, மல்லிகாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கனகசிவம், யோகசிவம், ராஜசிவம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், தருணிகா, தநிசா, காசினி, கதிரவன், ஆரபி, அக்ஷரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
கனகேஸ்வரி (மனைவி)
076 669 5116, 021 223 2391

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 23.12.1947 மறைவு 25.03.2021

கடந்த 25.03.2021 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### திருமதி சாந்தநாயகி சிற்றம்பலம்

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வருகை தந்தும், தொலைபேசி, மின்னஞ்சல் வாயிலாகவும், துண்டுப்பிரசுரம், பதாகைகள், மலர்வளையம் மூலமாகவும் அஞ்சலி செலுத்தி ஆறுதல் தெரிவித்தோருக்கும், மற்றும் பலவழிகளிலும் உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எம் குடும்பம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாந்தபுரி, மயிலணி.
சுன்னாகம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ... கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.